# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 24 வியாழக்கிழமை (08-03-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:102


## வடக்கு - கிழக்கு தமிழர் பூமி என்பது தீவிரவாதக் கருத்து

# இனப்பிரச்சினைக்கு ராணுவத் தீர்வை அமெரிக்கா முற்றாக நிராகரிக்கின்றது!

## அந்நாட்டுத் தூதர் வில்ஸ் யாழ்.நகரில் விசேட உரை

யாழ்ப்பாணம், மார்ச்8

**இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலமே தீர்வைக் காண முடியும். அதற்கு இராணுவத் தீர்வு உண்டு என்பதை அமெரிக்கா நிராகரிக்கிறது.**

**இலங்கையோ அல்லது அதன் எந்தப் பிரதேசமோ எந்த இனக் குழுமத்தினதும் விசேட உரிமைக்கு உரியது என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. வடக்கு - கிழக்குப் பிரதேசம் தமிழ் மக்களின் தனித்துவமான பூமி என்பது தீவிரவாதமான ஒரு கருத்தாகும்.**

**இவ்வாறு தெரிவித்தார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ். யாழ்.பொது நூலகத்தில் நேற்று அவர் ஆற்றிய விசேட உரையிலேயே இதனைத் தெரிவித்தார்.**

இரண்டு நாள்கள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்த தூதர் அஸ்லி வில்ஸ் கண்டுக்குழியில் உள்ள யாழ்.பொது நூலகத்தில நேற்று விசேட உரையாற்றினார்.

'ஸ்ரீலங்காப் பிரச்சினை - சில அவதானிப்புகள்' என்ற தலைப்பில் தூதர் வில்ஸ் வழங்கிய நீண்ட உரையை செவிமடுப்பதற்காக அங்கு பெரும் எண்ணிக்கையானோர் குழுமியிருந்தனர்.

தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர் அதிவண.எஸ்.ஜெபநேசனின் அறிமுக உரையைத் தொடர்ந்து தூதரின் உரை இடம்பெற்றது.

(13ஆம் பக்கம் பார்க்க)



அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ் நேற்று யாழ்.பொது நூலகத்தில் விசேட உரையாற்றியபோது எடுக்கப்பட்ட படம்.

## தூதுவரின் உரை குறித்து பிரமுகர்கள் பலரும் அதிருப்தி

யாழ்ப்பாணம்,மார்ச்8

அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் நேற்று யாழ்.பொதுசன நூல் நிலையத்தில் நிகழ்த்திய உரை குறித்துப் பிரமுகர்கள் பலரும் அதிருப்தியும் கசப்புணர்வும் வெளியிட்டனர்.

'ஸ்ரீலங்காவின் பிரச்சினைகள் குறித்த சில அவதானிப்புக்கள்' என்ற பொருள் பற்றி அவர் ஆற்றிய நீண்ட உரையில் தெரிவித்த கருத்துக்கள் தமிழ் மக்களின் நீண்டகால அபிலாஷைகளுக்கு மாறானவை என்றும் -

தமிழ் மக்களின் வரலாறு, இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் அவர்கள் அனுபவித்து வரும் கஷ்டங்கள், நியாயமான தீர்வு கேட்டுச் சாத்வீக வழியில் போராட்டம் நடத்தித் தோல்வி கண்டமை, ஆயுதப் போராட்டத்துக்குத் தமிழ் மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்ட பின்னணி என்பனவற்றைக் கருத்தில் கொள்ளாத நிலையில் தூதுவரின் பேச்சு அமைந்திருந்ததாகப் பிரமுகர்கள் பலரும் பேசிக்கொண்டனர்.

குடாநாட்டின் பல துறைகளையும் சேர்ந்த பிரமுகர்கள் இந்த நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாட்டை நிராகரிக்கும் விதத்தில் தூதுவர் வெளி

(14ஆம் பக்கம் பார்க்க)

## பிரெஞ்சு தூதரக அதிகாரி வருகை

யாழ்ப்பாணம்,மார்ச்8

கொழும்பில் உள்ள பிரெஞ்சுத் தூதரக பாதுகாப்பு அதிகாரி கேணல் பற்றிக் சன்சயின் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

யாழ்.செயலகம், யாழ்.பல்கலைக் கழகம் உட்பட பல இடங்களுக்குச் சென்ற அவர் அதிகாரிகளுடன் கலந்துரையாடி இங்குள்ள நிலைமைகளைக் கேட்டறிந்தார். (ஐ-3)

## சயனைட் அருந்தி இளைஞன் தற்கொலை

கொழும்பு,மார்ச்8

மன்னார் நகரில் நேற்றுமுன்தினம் படையினர் வீடு ஒன்றைச் சுற்றிவளைத்த போது அந்த வீட்டில் இருந்த இளைஞர் ஒருவர் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து வீடு ஒன்றைப் படையினர் சுற்றிவளைத்த சமயம் அந்த வீட்டுக்குள் இருந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவரை தூதர் வில்ஸ் சந்தித்தார்

யாழ்ப்பாணம்,மார்ச்8

யாழ்ப்பாணம் வந்திருந்த அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ் நேற்று நண்பகல் யாழ்.பல்கலைக்கழகத் துணை வேந்தரையும், மாணவர் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்நகரில் உள்ள ஐ.நா.அபிவிருத்தித்திட்ட அலுவலகத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் குடாநாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் குறித்து தூதருடன் உரையாடினர்.

நேற்று யாழ்.பொது நூலகத்தில் நடந்த வைபவத்தில் அமெரிக்கத் தூதர் தெரிவித்த சில கருத்துக்கள் தொடர்பாக மாணவர்கள் தமது

(14ஆம் பக்கம் பார்க்க)

## வரவு செலவுத் திட்டம் இன்று சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு,மார்ச்8

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் வரவு செலவுத் திட்டம் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரத்துங்க வரவுசெலவுத் திட்டத்தை இன்று பிற்பகல் சபையில் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கான சம்பள உயர்வு குறித்து இன்று அறிவிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுசன ஐக்கிய முன்னணி இரண்டாவது முறையாகப் பதவி ஏற்ற பின்னர் சமர்ப்பிக்கப்படும் முதலாவது வரவு - செலவுத் திட்டம் இதுவாகும். யுத்தத்துக்கு பெரும் தொகை நிதி ஒதுக்கப்பட்டிருப்பதால் இம்முறை வரவு செலவுத்திட்டம் 'போர் பட்ஜெட்' என வர்ணிக்கப்படுகிறது.(ஐ-3)

### மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம்

## கிரிக்கெட் வீரர் அர்ஜுன நேற்று பொலீஸில் சரண்!

கொழும்பு,மார்ச்8

கொழும்பு அசோக வித்தியாலய மாணவர் குழுவொன்று கடந்த வெளியன்று தாக்குதலுக்கு உள்ளான சம்பவம் தொடர்பாகத் தேடப்பட்டு வந்த இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க நேற்று மருதானைப் பொலீஸாரிடம் சரணடைந்தார்.

மாணவர்கள் மீதான தாக்குதல் சம்பவத்தின் பின் கென்யாவுக்குச் சென்றிருந்த அர்ஜுன ரணதுங்க நேற்றுக் காலை கொழும்பு திரும்பியிருந்தார். அதன்பின்னர் அவர் பொலஸில் சரணடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தேடப்பட்டு வந்தவர்களில் ஒருவரான அர்ஜுன ரணதுங்கவின் தம்பியான பிரசன்ன ரணதுங்கவும் அவரது நண்பர்கள் இருவரும் நேற்று முன்தினம் மருதானைப் பொலீஸ் நிலையத்தில் சரணடைந்திருந்தனர்.

நேற்று சரணடைந்த அர்ஜுன கொழும்பு நீதிமன்றத்தில் உடனடியாக ஆஜர் செய்யப்பட்டார். பின்னர் அவர் 5 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இதற்கிடையில் -

இந்தச் சம்பவம் தொடர்பாக பக்கச் சார்பின்றி விசாரணை நடத்தப்பட

(14ஆம் பக்கம் பார்க்க)



அரசியல் தஞ்சம் கோரி வருவோரை நாடு கடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜேர்மனியில் வசிக்கும் ஈழத் தமிழர்கள் கடந்த 2ஆம் திகதி ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தினர். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்.

## இன்று புலிகள் தாக்கக்கூடும் பிரதி சபாநாயகர் எச்சரிக்கை

கொழும்பு,மார்ச்8

நாடாளுமன்றத்தில் இன்று வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் நிகழ்வில் பங்குபற்ற வரும் அமைச்சர்கள், எம்.பிக்கள் ஆகியோரைத் தாக்க விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

பிரதி சபாநாயகர் மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க இவ்வாறு எச்சரித்துள்ளார்.

பிரதி சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட பின் நேற்று முதல் முறையாக அவர் நாடாளுமன்றில் கன்னிப் பேச்சை நிகழ்த்தினார்.

அச்சமயமே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

ஆனையிறவுப் பின்னடைவுக்கான காரணத்தை விவரமாக எடுத்துக்கூறிய அவர், யாழ்ப்பாணம் படையினரின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளது என்று தெரிவித்தார். படையினர் தொடர்ந்து வெற்றிகளை ஈட்டி வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## தொலைந்து விட்டது

ஒரு சங்கிலியும் இரண்டு மோதிரங்களும் யாழ். அரசடி பிறவுண் வீதிச் சந்திக்கும் யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கும் இடையே 07.03.2001 புதன் காலை தொலைந்துவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து **த.சிவானந்தன், 154, நாவலர் வீதியில்** உள்ள (விக்னேஸ்வரா அச்சக அருகில்) எனது இல்லத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**- த.சிவாநந்தன்.**

(85108)

## 'வரவு'க்கு வரவு கண்டு மகிழ்வோனை வாழ்த்துகின்றோம்



### திரு.கணபதிப்பிள்ளை தேவராஜா

**(வணிகத்துறைத் தலைவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)**

எங்களுக்கு உங்களை வாழ்த்துவதற்கு விருப்பம்;
ஆனால் எமக்கு வயது இல்லை!
நீங்கள் எங்களுடைய நிஜம்!
ஆனால் நாங்கள் உங்களுடைய நிழல்!
எங்கள் தேவையை நீங்கள் அறிவீர்கள்!
உங்கள் சேவையை நாம் அறிவோம்.
நீங்கள் ஒரு மத்திய வங்கி;
ஏனெனில் 'உற்றுழி உதவுவோன்'
நாங்களோ வணிக வங்கிக் கிளை வாடிக்கையாளர்;
எங்கெங்கு காணினும் உம் நிழல் தெரிகிறது.
உந்தன் நிழல் தொடர
எம் நல்வாழ்த்துக்கள்!

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

*– வர்த்தக மாணவர் ஒன்றியம்.*

(C/15603)

†
யேசு மரி சூசை துணை

## ❀ ருது சோபன அழைப்பு ❀

நாளை 2001-03-09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரையுள்ள சுப நேரத்தில்

**எமது சிரேஷ்ட புத்திரி**

### செல்வி அனோஜ் பிறீஜிற் (பிறீடா)

**அவர்களுக்கு**

பூப்புனித நீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்
**திரு.சூ.யோசேப் ஞானரத்தினம்**
**திருமதி மாசில் மனோகரி.**

*பஸ்நிலையம் முன்பாக,*
*சுன்னாகம்.*

(85105)

## யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை

**வல்வெட்டித்துறை**

## இல்ல மெய்வன்மைப்போட்டி - 2001

*இடம்:* திருவில் விளையாட்டு மைதானம்
*காலம்:* நாளை (09.03.2001) வெள்ளிக்கிழமை 2.00 மணி

*தலைவர்* : திரு.த.தவேந்திரராசா (அதிபர்)

*பிரதமவிருந்தினர்*
திருமதி சு.அருண்குமார்
(உதவிக் கல்விப் பணிப்பாளர் - விஞ்ஞானம், வடமராட்சி வலயம்.)

*சிறப்பு விருந்தினர்கள்*
திரு.T.T.ஜெகநாதன்
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
திரு.செ.சுப்பிரமணியம்
(அதிபர், யா/மட்டுவில் கமலாசினி வித்தி.)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சபை,
பழைய மாணவர்கள்.

(85103)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 10 மணிக்கு இல.34, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி என்ற முகவரியிலுள்ள சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சகல நிர்வாக சபை உறுப்பினர்களையும், இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஜ-7)

## தாதி தேவை

தாதியாக வேலை செய்ய பெண் பிள்ளைகள் தேவை. அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**நடன முருகன் வைத்திய நிலையம்**

*சத்திரத்துச் சந்தி,*
*யாழ்ப்பாணம்.*

(85082)

## BRIGHTMAN

**கல்வி நிலையம்**
**(நீராவியடிப் பிள்ளையார் கோவில் முன்பாக)**
**பிறவுண் வீதி, யாழ்.நகர்.**

**A/L 2003**

**இணைந்த கணிதம்**
**PURE** : திரிகோணகணிதம்
**APP.** : நிலையியல்

By: ஐங்கரன் B.Sc.

ஆரம்பம்:10.03.2001 3.00 p.m.

(85074)

## விற்பனைக்கு

புதிய Fuji A/3 அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் கவரிடுதல் (Laminating) இயந்திரம், Canon NP 1215 மறுபுனர் செய்யப்பட்ட போட்டோகொப்பி எடுக்கும் இயந்திரம் மற்றும் உதிரிபாகங்கள் ரோணர்கள் தரமானதும் நியாய விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

*தொடர்பு:*
**மூர்த்தி,**
*குமரன் விடுதி,*
*67,ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(85064)

## ராஜா

**யாழ்ப்பாணம்**

**தமிழில்**

## டைட்டானிக்

காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)

(C/15473)

## லஷ்சுமி இணுவில்

இன்று மட்டும்

**அஜித், சிம்ரன் நடித்த**

**உன்னைக்கொடு என்னைத் தருவேன்**

(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

10.03.2001 முதல்

**கண்ணன் வருவான்**

## நாகம்ஸ்

**சுன்னாகம்**

**விஜயகாந்த், தேவயானி, வாசு, கபாலி நடித்த**

(84858)

## வல்லரசு

(றீல்ஸ்)

காட்சிகள்:11.00, 2.30
(புதிய நேரம்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1953 - 06 - 12

உதிர்வு 2000 - 02 - 18

### அமரர் வடிவேல் குணசேகரம்

**(மோட்டார் சைக்கிள் மெக்கானிக் - G.N.K. சேவிஸ் சென்ரர் உரிமையாளர்)**

திதி: 08.03.2001

ஓராண்டு சென்றதுவோ உங்கள் முகம் காணாமல்?
என்றுமே ஏங்குகின்றோம் உங்கள் வரவை எண்ணி

*K.K.S. வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(85101)

**மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.**

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா நாகலிங்கம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், கொண்ட செல்லையா நாகலிங்கம் அவர்கள் 02.03.2001இல் சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூமணி அவர்களின் அன்புக் கணவரும், மகேந்திரன் (சுவிஸ்), ரவீந்திரன் (சுவிஸ்), சுரேந்திரன்(சுவிஸ்), காலஞ்சென்ற நகுலேந்திரன், பஞ்சேந்திரன் (சுவிஸ்), வர்ணலாதேவி(சுவிஸ்), வர்ணகுலேந்திரன் (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2001)வியாழக்கிழமை சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*15/1, பலாலி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (85088)

தகவல்:
திருமதி சி.வர்ணகுலேந்திரன்.

### கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை

தையிட்டியைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார்கோயிலடியை வசிப்பிடமாகவும், கொண்ட பிரபல வர்த்தகர் கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை அவர்கள் (06.03.2001) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் பூமணியின் அன்புக் கணவரும், திருமதி சுசீலா சுந்தரேசன், திருமதி லலிதா மகேந்திரன், தெய்வேந்திரம்(ரவி மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்), புவனேந்திரன்(வர்த்தகர், நாச்சிமார் கோயிலடி), மகேந்திரன் (கனடா), இராஜேந்திரன்(கனடா), திருமதி வனிதா தனபாலசிங்கம், திருமதி ரஜிசா ஸ்ரீதரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சுந்தரேசன் (உதவி ஆணையாளர் - கமநல சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்), மகேந்திரன்(கனடா), மஞ்சுளா, விஜயதேவி, தயாநிதி(கனடா), சுகிர்தா(கனடா), தனபாலசிங்கம் (ஆசிரியர் - கொழும்பு), ஸ்ரீதரன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன் (லண்டன்), சேந்தன்(கனடா), சுதர்ஜனன், நிரோஜனா, முரளி தாஸ்(கனடா), மௌலி தாஸ் (கனடா), துவாரகன், ஜனுசியா, பவிஷா, சாளினி, மயூரகன், மயூரி, ஷர்மிளி, சஜித் (கனடா), ஆகியோரின் அன்புப் பேரனாரும், கிருஷ்ணபிள்ளை, காலஞ்சென்ற சேதுப்பிள்ளை மற்றும் சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (08.03.2001) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*1010/12சீ, நாச்சிமார்கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.* (c/15604)

தகவல்:
க.சுந்தரேசன்
(மருமகன்)
வே.தெய்வேந்திரம்
(மகன் - ரவி மோட்டோர்ஸ்)

### திருமதி கோபாலரத்தினம் சசிகலா

சிறாம்பியடி, யாழ். வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோபாலரத்தினம் சசிகலா அவர்கள் 05.03.2001திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஈழமுரசு நிறுவுநர் மயில் அமிர்தலிங்கத்தின்(முன்னாள் மாவட்டக் காணி உத்தியோகத்தர்) அன்புச் சகோதரியும், தம்பையா கோபாலரத்தினத்தின் (முன்னாள் குடியேற்றத்திட்ட அதிகாரி) அன்பு மனைவியும், திருமதி திருக்குமார் சியாமளா(ஜேர்மனி), சித்திரகுமாரன்(பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), இலங்கேசன் (இறுதியாண்டு - பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவராசா திருக்குமாரின் (ஜேர்மனி) அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.03.2001)வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுத் தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் யாழ். கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*49A, சிறாம்பியடி,*
*யாழ். வீதி (ஸ்ரீதர் தியேட்டரடி)*
*யாழ்ப்பாணம்.* (85099)

தகவல்:
கோ.சித்திரகுமாரன்
(முகுந்தன் - மகன்)

# உதயன்

## முடுக்கிவிடும் பொறுப்பு...

இலங்கையில் இனப்பிரச்சினைக்கான, நோர்வே அரசின் அனுசரணையுடனான சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றி அளிக்கவேண்டும் என்பது பெரும்பாலான மக்களின் பெருவிருப்பம். அதற்கு வகை செய்யும் விதத்தில் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகவேண்டும் என்பதும் அவர்களின் ஆர்வமாக உள்ளது.

பேச்சுவார்த்தைகள் ஏப்ரல் இறுதியில் அல்லது மே முற்பகுதியில் ஆரம்பமாகக் கூடிய சாத்தியங்கள் இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க (பெப்ரவரி இறுதி வாரத்தில்) இந்தியாவில் நின்ற வேளை தெரிவித்திருந்தார்

பிந்திய செய்திகளின் பிரகாரம் சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில் நெதர்லாந்தில் அரசு — விடுதலைப் புலிகளின் நேரடிப் பேச்சுக்கள் நடைபெறக்கூடும் என்று ஆருடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் பேச்சுவார்த்தை மேசையில் சந்திக்க வைப்பதற்காக விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அங்கென்றும் இங்கென்றும் ஓடித் திரிகிறார்,

எவ்வாறாயினும் பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்கான திகதி நிர்ணயிக்கப்படும் வரை சமாதான விரும்பிகளின் மனங்கள் அங்கலாய்ப்பது இயல்பே. சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற விருக்கிறது என்ற நம்பிக்கை ஊட்டப்பட்ட பின்னர், அது தவறும் பட்சத்தில் மக்கள் ஏமாற்றம் அடைவார்கள்.

எனவே சம்பந்தப்பட்ட இரு தரப்புகளும் எந்தச் சந்தர்ப்பத்திலும் பேச்சுவார்த்தையிலிருந்து சறுக்குவதற்கு முனையக் கூடாது. அரசாங்கம் இது விடயத்தில் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும்

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் மூன்று மாத காலமாக போர் நிறுத்தத்தைக் கடைப் பிடித்து வருகிறார்கள். சமாதானத்துக்கான தமது விருப்பத்தை — சமிக்ஞையை — மிக துலக்கமாகத் தெரிவித்து வருகிறார்கள். தம்மைத் தடைசெய்வதற்கான நடவடிக்கைகளை பிரிட்டன் மேற்கொண்ட போதிலும், அதனால் சமாதானப் பேச்சு முயற்சிகளுக்கு இடையூறு, குந்தகம், தடங்கல் உண்டாகாமல் செயற்படுகிறார்கள்.

ஆகையால் அரசாங்கம் எப்போதும் போல, விடுதலைப் புலிகள் மீதே குற்றம் கண்டு பிடித்துக் கொண்டிராமல் பேச்சுவார்த்தை முயற்சிகளில் உரிய அக்கறை செலுத்தி அதனை விரைவுபடுத்த வேண்டும். அதற்கான புரிந்துணர்வை வளர்ப்பது அவசரம்.

சமாதானப் பேச்சுக்களின் தொடக்கத்தை நிர்ணயிக்கும், அதனை முடுக்கிவிடும் பொறுப்பில் பெரும் பகுதி இப்போது அரசின் பக்கமே உள்ளது. அதாவது பந்து அந்தப் பக்கமே!

சமாதான முயற்சிகளுக்குச் சாதகமான சமிக்ஞை கருநிலை கொண்டு மாதங்கள் நான்கு கடகடவென பறந்தோடி விட்டன. இனியும் மேலும் தாமதம் செய்தால் அரசின் அசிரத்தையையும் அசமந்தத்தையுமே அது பிரதிபலிக்கும்.

இன்று செய்வதை நாளைக்கென ஒத்திப் போடுவது சோம்பேறித் தனத்தை மட்டுமன்றி விருப்பமின்மையையும் விசுவாசமின்மையையும் வெளிப்படுத்துவதாகும். அரசாங்கம் இது விடயத்தில் சோம்பேறித் தனத்தைக் காட்டாதெனில்.........

# சுருக்கெழுத்தாளர் 10 பேர் நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ் மாவட்டத்திலிருந்து அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவை தரம் IIக்கு 10 பேர் கடந்த முதலாம் திகதி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

98ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் பிரகாரம் 99 ஆம் ஆண்டு யாழ். செயலகத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 10 பேருக்கே மேற்படி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நியமனம் வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு;-

★ திருமதி க. தவமலர் — கரணவாய் தெற்கு [இன விவகார, தேசிய ஒருங்கிணைப்பு, கனிப்பொருள் வளங்கள் அமைச்சு]

★ த. சுதாஜினி — வல்வெட்டித்துறை [இன விவகார, தேசிய ஒருங்கிணைப்பு, கனிப்பொருள் வளங்கள் அமைச்சு]

★ த யோகராணி — கொம்மந்துறை [அரச கரும மொழிகள் திணைக்களம்]

★ இ. ஜெயந்தி — இமையாணன் வடக்கு [உயர் கல்வி, தகவல் தொழில்நுட்ப அமைச்சு]

★ சி. சௌந்தினி — அல்வாய் வடக்கு [ஏறாவூர் பிரதேச செயலகம்]

★ ச. நிர்மலா — அல்வாய் மேற்கு [கந்தளாய் பிரதேச செயலகம்]

★ தே சுகன்யா — இமையாணன் கிழக்கு [வெருகல் பிரதேச செயலகம்]

★ பத்மஸ்ரீ பரிமளவதனி — அல்வாய் கிழக்கு [வாழைச்சேனை பிரதேச செயலகம்]

★ கு. சுதர்சன் — உடுப்பிட்டி [உடுவில் பிரதேச செயலகம்]

★ மு. அமிர்தகுமாரி — கரவெட்டி கிழக்கு [திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகம்] [ஜ-10]

## தீர்த்த உற்சவம்

நெல்லியடி, மார்ச் 8

தென்புலோலி முதலி அம்பான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் பதினொராம் நாளாகிய இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

இரவு இன்னிசைக் கானங்களும் ''கடமையா, பாசமா?'' நாடகமும் இடம்பெறும்.

(க-109)

## மகளிர் தின நிகழ்வு

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழு நடத்தும் அனைத்துலக மகளிர் தின விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட மகளிர் குழு தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினர்களாக மக்கள் வங்கி கன்னாதிட்டி கிளை முகாமையாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம், யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் (அபிவிருத்தி) எஸ். கே சண்முகநாதன், கூட்டுறவு உதவி ஆணையாளர் (ப.தெ வ. அபிவிருத்தி) எஸ். கணேசமூர்த்தி, கூட்டுறவு உதவி ஆணையாளர் (எண்பார்வை) எஸ். கனகசபாபதி, யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை தலைவர் பெ. கனகசபாபதி ஆகியோர் கலந்துகொள்வர்.

(ம-135)

## தமிழ் மொழி மூல தகுதி காண்

# ஆசிரியர்கள் 50 பேர் யாழ்ப்பாணத்திற்கு நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் யாழ். மாவட்டத்துக்கு தமிழ்மொழி மூல தகுதி காண் ஆசிரியர்கள் 50 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் நியமனம் வழங்கப்பட்டுள்ள இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் யாழ். கல்வி வலயத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தமது நியமனக் கடிதங்களை நாளை வெள்ளிக்கிழமை தத்தமது பகுதி வலயக் கல்விப் பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ். கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நியமனம் வழங்கப்பட்டுள்ள 50 பேரில் யாழ். கல்வி வலயத்துக்கு நியமனம் வழ்ங்கப்பட்டுள்ள 13 பேரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

நிஸ்வி தியாகராஜா (கோப்பாய்), ரதிவதனி தியாகராஜா (கோப்பாய்), நீசா சியாமளா அன்ரனி (மடம் வீதி, யாழ்), ஸ்ரீபதி திரிவேணி (நெட்டிலிப்பாய், கோண்டாவில்), கிறிஸ்ரினா பாக்கியநாதன் (குருநகர்)—

பாலசுந்தரம் சசிக்குமரன் (கொக்குவில் மேற்கு), சுகுணாளினி கந்தையா (கோப்பாய் தெற்கு), கனகசபாபதி வானதி (ஊரெழு கிழக்கு), பாலசுப்பிரமணியம் அரியதாஸ் (நீர்வேலி மேற்கு), நடராசா கஜேந்திரன் (அச்சுவேலி தெற்கு)—

வடிவேலு செந்தூரன் (ஆவரங்கால்), முருகேசு சிவப்பிரகாசம் (அச்சுவேலி தெற்கு), சூசைப்பிள்ளை ஜெனாட் ஸ்ரீபன் (மவுண்கார்மல் வீதி யாழ்).

(க-10)

# வீதியில் வைத்து குழந்தையை கொல்ல முயன்ற பெண்!

## அயலவர்கள் ஓடிவரவே தப்பினார்

யாழ்ப்பாணம், மார்ச் 8

திருநெல்வேலிப் பகுதியில் பெண் ஒருவரால் கழுத்து நெரித்துக் கொல்லப்பட விருந்த குழந்தையின் உயிர் அயலவர்களினால் காப்பற்றப்பட்டது,

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் திருநெல்வேலி கலாசாலை வீதியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

30 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் சுமார் 11 மாத பெண் குழந்தை ஒன்றை தூக்கி வைத்திருந்தபடி அக்குழந்தையின் கழுத்தை திருகிக்கொண்டிருந்தார் என்றும் —குழந்தை வீரிட்டு அலறும் சந்தத்தை கேட்டு அயல் வீட்டைச் சேர்ந்தவர்கள் வீதிக்கு வந்த போது அந்தப் பெண் குழந்தையை அந்த இடத்தில் போட்டு விட்டு தப்பியோடிவிட்டதாகவும்—கூறப்படுகிறது

குழந்தை உயிராபத்து எதுவுமின்றி அயலவர்களால் மீட்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக திருநெல்வேலி இராச வீதியிலுள்ள கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பொதுமக்கள் செய்த முறைப்பாட்டினைத் தொடர்ந்து பொலிஸார் குழந்தையைப் பொறுப்பு எடுத்தனர்.

அக்குழந்தை நேற்று கோப்பாய் பொலிஸாரினால் யாழ். நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இக் குழந்தையை நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள அரச சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்குமாறு நீதிவான் இ. த. விக்னராஜா உத்தரவிட்டார்.

[ஜ—5—6]

# நெடுந்தீவில் இரு தினங்கள் நடக்கும் கலை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 8

நெடுந்தீவு கலாசாரசபையின் ஏற்பாட்டில் யாழ். திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் பங்குபற்றும் நாடக, கூத்து விழாவும், நாடகப் பயிற்சிப்பட்டறையும் நாளை வெள்ளிக்கிழமை முதல் இரண்டு தினங்களுக்கு நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

முதல் நாள் நிகழ்வுகள் நாளை இரவு 8 மணிக்கு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரும், கலாசாரசபையின் தலைவருமான ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் ஆரம்பமாகும்.

இந்த நிகழ்வில் நெடுந்தீவு பல நோ. கூ. சங்கத் தலைவர் நா. சங்கரப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சோழன் மகன் (நாட்டுக் கூத்து), அரிச்சந்திர மயான காண்டம் (இசைநாடகம்), ஜீவப்பிரயத்தனம் (நவீன நாடகம்), கனவில் ஒரு நிஜம் (ஓராள் அரங்கு) ஆகிய நிகழ்வுகள் முதலாம் நாளின் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் சனிக்கிழமை காலை, மாலை என இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.

காலை நடைபெறும் நாடகப் பயிற்சிப் பட்டறை நிகழ்வுக்கு நெடுந்தீவுப் பிரதேச சபைத்தலைவர் புலவர் ஏ டபிள்யூ அரியநாயகம் தலைமை வகிப்பார். நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகம் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இரவு 8 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்வுகளுக்கு நெடுந்தீவு பிரதேசசபைத் தலைவர் புலவர் ஏ டபிள்யூ. அரியநாயகம், ஈ பி. டி. பியின் நெடுந்தீவுப் பொறுப்பாளர் மோகன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

பூதத்தம்பி (இசை நாடகம்), கூடித்துயர் வெல் (சிறுவர் நாடகம்), எங்கட பிள்ளைகள் (ஓராள் அரங்கு), இன்னிசை விருந்து என்பன இரண்டாம் நாள் நிகழ்வில் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும்.

நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகத்தின் வழி நடத்தலில் நெடுந்தீவுக்கான கலாசார உத்தியோகத்தர் இந்த நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளார்.

(ம-7)

## நாளை

மாசி 25

வெள்ளிக்கிழமை

திதி: பூரணை

முன் இரவு 11.37 வரை.

நட்சத்திரம்: பூரம்

பின் இரவு 1-44 வரை.

பூரணை விரதம்

சுபநேரம்: 6.24 — 7.54

ராகுகாலம்: 10.54—12.24

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

கெட்ட காரியத்தைச் செய்ய அஞ்சு; வேறு எதற்கும் நீ அஞ்சவேண்டாம்.

# ஒன்றித்து வாழ்வோம்!

## தவக்காலச் சிந்தனை

## 9 ஆம் நாள்

''பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புபவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள்'' யேசு (மத். 7: 12)

இதயத்தின் ஆழத்திலிருந்து புறப்படுகின்ற குமுறலே செபம் என்ற உண்மையை வெளிப்படுத்துகின்றது. அன்று இஸ்ரயேல் மக்களுக்குத் தண்டனை வழங்க வேண்டுமென அரசன் துடித்தான். ஆனால் அந்த மக்களுடைய வேதனையைப் புரிந்து கொண்ட எஸ்தர் அந்த மக்களுக்காக பரிந்து பேசி கடவுளிடம் தனது இதயக் குமுறலைக் கொட்டினார். செபம் என்பது மனிதனையும் கடவுளையும் இணைக்கக் கூடிய இணைப்புப் பாலம். கடவுளிடம் ஒருவன் கேட்பதைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் அவன் பிறரை மன்னிக்கத் தயாராக இருக்க வேண்டும். வெளிவேடம் இருத்தல் கூடாது பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் இறைவனின் விருப்பத்திற்கு ஏற்ப நடக்க வேண்டும்.

செபம் மனிதனுடைய உணர்ச்சிகளை, தேவைகளை, வேதனைகளை, இறைவனிடம் கொண்டு சேர்க்கக் கூடிய கருவி. இயேசு ஒரு வரைமுறையை வகுத்துத் தருகின்றார். கேட்டல், தேடுதல், தட்டுதல் ஆகிய மூன்று அம்சங்களின் வழி, ஒருவனது செபத்தில் இருக்கவேண்டும். ''கேளுங்கள் கொடுக்கப்படும் தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள்'' என்ற தெய்வீக உண்மையைச் செபம் சுட்டிக்காட்டுகின்றது. செபத்தில் தன்னையே முழுமையாக அர்ப்பணித்த புனிதர்கள் முடிவில்லா வாழ்வினைக் கண்டார்கள். கடவுள் நமக்கு கொடுத்த கொடைகளிலெல்லாம் சிறந்த கொடை செபம், அதனை உணர்ந்து பிறருடைய வாழ்வில் நன்மை செய்வோம். பிறர் எமக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகின்றோமோ அதனைப் பிறருக்கு முதலில் செய்ய முழுமனதுடன் எம்மை அர்ப்பணிப்போம். இறைவனுடன் ஒன்றித்து வாழ்வோம். அப்போதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை உதயமாகும்.

த. வாணி

பருத்தித்துறை.

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
முறைசாராக் கல்விப் பிரிவினர் வழங்கும்

## 'உடையமைத்தல்'
## தொழிற்றிறன் கண்காட்சி-2000

இடம்:- யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
காலம்:- நாளை ( 2001-03-09 )
வெள்ளிக்கிழமை மு.ப 9-30 மணி

தலைமை:- திருமதி இ. குட்டித்தம்பி
அதிபர், யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

பிரதம விருந்தினர்:- உயர்திரு. சி. சிவராஜா
வலயக்கல்விப் பணிப்பாளர், வடமராட்சி

சிறப்பு விருந்தினர்:- திரு. சி. நந்தகுமார்
உதவிக் கல்விப் பணிப்பாளர், முறைசாராக்கல்வி,
வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், போதனாசிரியர்,
பயிற்சியாளர்கள்.

கண்காட்சி சிறப்புற வாழ்த்துபவர்கள்:
**சண் விக்கி புடைவையகம்**
உடுப்பிட்டி. (84907)



## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள
உதவி ஆணையாளரும்
யாழ். மாவட்ட கமநல காப்புறுதிச் சபையின்
உதவிப் பணிப்பாளருமாகிய
திரு. க. சுந்தரேசன்
அவர்களின் அன்பு மாமனார்

**கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை**

அவர்கள் 06—03—2001 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது அனைத்து உத்தியோகத்தர்களினதும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

யாழ். மாவட்ட கமநல சேவைகள்
திணைக்கள உத்தியோகத்தர்களும்,
கமநல கேந்திர நிலைய
உத்தியோகத்தர்களும்,
கமநல காப்புறுதிச் சபை
(85962) உத்தியோகத்தர்களும்.



## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 18 — 04 — 1942

உதிர்வு 14 — 02 — 1994

**அமரர் தியாகராசா அரசரத்தினம்**

திதி: 8-3-2001

அப்பாவே! உங்கள்
இன்முகமும் இனிய குணமும்
எந்நாளும் நெஞ்சில் வந்து
நீங்காது நிழலாடுகின்றன!
கூற்றுவன் உங்களைக் கவர்ந்து
ஆறு ஆண்டுகள் விரைந்து சென்றாலும்
ஆறுமோ உங்கள் நினைவு?

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம். (84980)


# யுத்தத்தை நிறுத்தக் கோரி இன்று கொழும்பில் மகளிர் அமைப்புப் பேரணி

கொழும்பு, மார்ச் 8

அரசாங்கம் யுத்தத்தை உடனடியாக நிறுத்திப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி சர்வதேச மகளிர் தினமான இன்று 8 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

மக்கள் சமாதான முன்னணியின் ஏற்பாட்டில் யுத்தத்திற்கு எதிரான பெண்கள் அமைப்பு இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை மேற்கொள்ளவுள்ளது.

விகாரமாதேவி பூங்காவிலிருந்து ஆரம்பமாகும் இந்தப் பேரணியில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொள்வர் என எதிபார்க்கப்படுகிறது.

யுத்தத்தை நிறுத்திப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு சுலோக அட்டைகளை ஏந்திய நூற்றுக்கணக்கான முச்சக்கர வண்டிகளுடன் ஆரம்பிக்கும் இந்தப் பேரணி அலரிமாளிகைக்கும், இனவிவகார அமைச்சுக்கும், எதிர்க்கட்சித் தலைவரின் வாசஸ்தலத்திற்கும் செல்லவுள்ளது.

பிரதமரிடம் அறிக்கையொன்றக் கையளிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, மக்கள் சமாதான முன்னணியின் யுத்தத்திற்கு எதிரான பெண்கள் அமைப்பு உடனடியாகப் போரை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சியும் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ள இந்த அமைப்பு இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதற்கான ஆதரவைச் சர்வதேச சமூகமும், நோர்வே அரசாங்கமும் தொடர்ந்தும் வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. (க)

## தொழிலாளி படுகாயம்

தென்மராட்சி, மார்ச் 8

கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கும் வேளை கப்பல் கதவு வீழ்ந்து தொழிலாளி ஒருவர் படுகாயமடைந்தார்.

பருத்தித்துறைச் சந்தை மேற்கு ஒழுங்கையைச் சேர்ந்த சிவகுரு விஜயகுமார் (வயது 21) என்னும் இளைஞரே தொடை எலும்பு முறிந்து காயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர் ஆவார். (ப-117)

## இளைஞர் குழுக்கள் மோதல்

கோப்பாய், மார்ச் 8

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயப் பகுதியில் கடந்த சில தினங்களாக இரவு நேரத்தில் இளைஞர் குழுக்கள் அடிதடி ரகளையில் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி வாசிகள் தெரிவிக்கின்றனர்.

தனிப்பட்ட பகைமை காரணமாக இளைஞர் குழுக்கள் அணி திரண்டு மோதி வருவதாகக் கூறப்படுகின்றது.

இதனால் அப்பகுதி மக்கள் பெரும் விசனமடைந்துள்ளனர். (ஐ)

## பளைப்பகுதிமக்கள் விசேட அடையாள அட்டை பெற வசதி

தென்மராட்சி, மார்ச் 8

பளைப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்வதற்கு முன்னர் விசேட அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பங்களைப்பிரதேச செயலகத்தில் சமர்ப்பித்து இதுவரை விசேட அடையாள அட்டைகள் கிடைக்காதவர்கள்—

உடனடியாகத் தத்தமது பிரிவு கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து இரண்டு புகைப்படங்களையும் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

அத்துடன் விசேட அடையாள அட்டை தொலைத்தவர்களும் விண்ணப்பப்படிவம் பெற்று படிவத்துடன் பொலீஸ் சான்றிழையும் ஒப்படைக்குமாறும் -

பழுதடைந்த நிலையில் விசேட அடையாள அட்டை வைத்திருப்போரும் உரிய படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-117)


## அழைப்புக் கட்டளை

இல 16 பிரிவு 55 (1)
**யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்**
**திருகுமார் பெண் நிஷியாமலா**
பழம் வீதி, கோப்பாய் தெற்கு,
வழக்காளி

வழ. இல. மண நீக்கம்/230
எதிர்

**சிதம்பரநாதன் திருகுமார்**
இராச வீதி, கோப்பாய்,
தற்போது முகவரி தெரியாது.
எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு,

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி இவ்வழக்கில் அணைக்கப்பட்ட பிராதில் வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 1991-05-20 ஆம் திகதி நிறைவேறிய பதிவுத் திருமணத்தை ரத்துச் செய்யப்படவேண்டுமென்ற கட்டளையும் தீர்ப்புக்கும் இந்நீதிமன்றத்தில் உமக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2001 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 21 ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்தில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறு கட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும்விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்

| | |
|---|---|
| வரைந்தது | நீதிமன்றக் கட்டளைப்படி |
| லிங்காதுரைராஜா | து.சிறீமோகன் |
| வழக்காளியின் | பதிவாளர் |
| சட்டத்தரணி. | மாவட்ட நீதிமன்றம், |
| | யாழ்ப்பாணம். |

குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும் 80 ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

கையொப்பம்: பதிவாளர்.
2001 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 05 ஆம்நாளாகிய இன்று.
(85055)



உ
இன்று (08 - 03 - 2001) வியாழக்கிழமை ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தில் ....
**மாசி மக சமாதான விடிவிளக்குகள் - 108**
**ஏற்றிவைக்கப்படும்.**
விடியும் பொழுது [09 - 03 - 2001] வெள்ளிக்கிழமை விடிவைத் தர ஈசுர விநாயகர் அருள் பாலிப்பாராக!
சோழியூரான் - பிறைசூடிக்குரு
(85066)

# கமநல நிலைய டிராக்டரை மீட்டுத் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்8

சாவகச்சேரி கமநல கேந்திர நிலையத்துக்குச் சொந்தமான உழவு இயந்திரம் ஒன்று இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டு பத்து மாதங்களுக்கு மேலாகி விட்டபோதும் இதுவரை மீள ஒப்படைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த உழவு இயந்திரத்தை இராணுவத்திடமிருந்து பெற்றுத் தருமாறு கமநல கேந்திர நிலைய அதிகாரிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த உழவு இயந்திரம் மீள வழங்கப்படா விட்டால் கமநல கேந்திர நிலையத்தை மீள இயக்குவது முடியாது என்றும் -

மீளப் பெற்றுத்தர முடியா விட்டால் புதிய உழவு இயந்திரம் வழங்கப்படவேண்டும் என்றும் -

அவர்கள் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-5)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மார்ச் 10இல் பொன்விழாக் காணும்

### உயர்திரு.க.தேவராஜா

(வணிகத்துறைத் தலைவர் - யாழ்.பல்கலைக்கழகம்)

பல்கலையில் பலநூறு பயிலுநர்கள் நின்வழியில்
பள்ளிகளில் பல்வேறு பணிவுடைகள் நின்தயவில்
சொல்லில் அடங்காத அடர்கொண்ட நாயகனே
புகழோடு நீடூழி வாழிய வாழியவே!

*யாழ். ஹோல் கல்வி நிலையம், யாழ்ப்பாணம்.* **திரு.இரா.செல்வவடிவேல்**

*விக்னேஸ்வரா கல்வி நிலையம் கொக்குவில்.* **திரு சண்.வாமதேவன்**

(84704)

## கண்ணீர் அஞ்சலி



### சவிரிமுத்து அந்தோனிப்பிள்ளை

(இளைப்பாறிய உத்தியோகத்தர், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை)

அவர்கள் நேற்று (07-03-2001) புதன்கிழமை மரணமடைந்ததையிட்டு ஆறாத்துயரில் இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**செலஸ்ரியன் சுவாமிநாதர்,**
**41, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.**
Tel - 3344

(85073)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 - 04 - 1932



மறைவு 20 - 02 - 1997

### அமரர் முருகேசு குமாரவேலு

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

**திதி: 08.03.2001** (வியாழக்கிழமை)

மறைந்தாலும்
எம் நினைவில் நிறைந்திருக்கும்
எம் குல விளக்கே!
உடலால் நீர் எம்மை
விட்டுப் பிரிந்தாலும் இப் புவியில்
நாம் உள்ளவரைக்கும்
எம் உள்ளங்களில்
உங்கள் நினைவு
என்றென்றும் அழியாது!....

*மூளாய் தெற்கு, சுழிபுரம்.*

*மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

(85059)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்8

யாழ்.இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 10 மணிக்கு கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-10)

## பொதுக் கிணறுகளை புனரமைக்க ஏற்பாடு

மூளாய்,மார்ச்8

வலிகாமம் மேற்கில் காணப்படும் பொதுக்கிணறுகளைப் புனரமைப்புச் செய்வதற்கு பட்டினிக்கு எதிரான நிறுவனம் முன்வந்துள்ளது.

அதிகளவு பொதுமக்கள் பயன்படுத்துகின்ற கிணறுகள், குடிதண்ணீர் தேவைக்காக அல்லது விவசாயத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் கிணறுகள் தெரிவு செய்யப்பட்டு புனரமைக்கப்படவுள்ளன.

மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான ஆரம்ப ஏற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-99)

## விஞ்ஞான கூடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்8

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் விஞ்ஞான கூடத்திறப்பு விழா இன்று வியாழக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு அதிபர் செ.யோகச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசாவும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி கல்வி வலய தொழில்நுட்ப உத்தியோகத்தர் த.இரவீந்திரராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.(ம-10)

## வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்8

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றுவரும் வாராந்த வெள்ளி நிகழ்வில் இவ்வார நிகழ்வாக -

"என்ன புண்ணியம் செய்தனை" என்ற தலைப்பில் வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் மகாஜனக் கல்லூரி ஆசிரியை திருமதி பகீரதி கணேசதுரை ஆகியோர் இணைந்து வழங்கும் உரைச் சித்திரம் இடம்பெறும்

## கலந்துரையாடல்

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் 'தொல்லியல் நோக்கில் யாழ்.குடாநாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சி நிலை' எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் செ.கிருஷ்ணராஜா உரை நிகழ்த்துவார். (ம-10)

## கலைப்பீட மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்8

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கைலாசபதி கலையரங்கில நடைபெறவுள்ளது. (க-10)

## மாநகர சபை உறுப்பினர் விளக்கமறியலில்

மேல் மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் 'செல் போனையும் 81 ஆயிரம் ரூபா பணத்தையும் அபகரித்த குற்றச்சாட்டின் பேரில் நீர்கொழும்பு மாநகரசபை உறுப்பினர் ஒருவர் உட்பட ஐவர் கொச்சிக்கடை பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது பற்றி பொலீஸ் இன்ஸ்பெக்டர் கமல் நயனரங்கா தெரிவிக்கையில் -

வெள்ளிக்கிழமையிரவு அன்ரன் நோனிஸ் ஒரு வாகனத்தை கொள்வனவு செய்வதற்காக கொச்சிக்கடைக்குச் சென்றார். அவரை இடைமறித்தவர்கள் ஒரு வானில் பலவந்தமாக ஏற்றி ஆராச்சிகட்டுவ என்னுமிடத்திலுள்ள இறால் பண்ணை ஒன்றிற்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவரைத் தாக்கி அவரிடம் இருந்த பணத்தையும் கொள்ளையடித்தனர்.

சந்தேகநபர்கள் நீர்கொழும்பு மஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். நீதிவான் மார்ச் 17 ஆம் திகதி வரையும் அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (சு-20)

# மரண அறிவித்தல்கள்

## சவிரிமுத்து அந்தோனிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 20/5, றக்கா ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சவிரிமுத்து அந்தோனிப்பிள்ளை நேற்று 07.03.2001 காலை காலமானார்.

அன்னார் மேரி திரேசாவின் அன்புக் கணவரும் மரியசெல்வம் (சுவிஸ்), மேரி கலிஷ்ரா (சுவிஸ்), மேரி யோசப்பின், மேரி வினிபிரிடா (பிரான்ஸ்), மேரி ஸ்கொலஸ்ரிக்கா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மேரி ஜெயமணி, அன்ரன், சிவஞானமூர்த்தி, பேரின்ப மரியதாஸ், மரியநேசன், ஜெயசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் எபோன், அபீற்றா, கமில்ற்றன், திவ்யா, நிறோசி, ஸ்றெபானி, எர்பின், லவனியா, ரியூலிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.03.2001) வியாழக்கிழமை மாலை (புதிய நேரம்) 3 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*20/5, றக்கா ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*
*T.P.: 021-3344*

தகவல்:
**பேரின்பமரியதாஸ்**
(மருமகன்)

(85072)

## சின்னத்தம்பி கோபாலன் (இராசையா)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், 110, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கோபாலன் 06.03.2001 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் கோபாலன் செல்லம்மாவின் அன்புக்கணவரும், சுதந்திரபாலன், மகேந்திரன் (விசுவமடு), தெய்வேந்திரன், பாலேந்திரன், இராஜேந்திரன், புவனேந்திரன் (மல்லாவி), தவமணி, விமலேந்திரன், ஆகியோரின் அன்புத் தந்தையும், தெய்வேந்திரராணி, சாந்தநாயகி (விசுவமடு), நாகேஸ்வரி, காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் குகனேஸ்வரி (ஆசிரியை வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்), விமலாதேவி (மல்லாவி), பாலச்சந்திரன் (அஞ்சலகம் சாவகச்சேரி), நிசாந்தினி (ஆசிரியை, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான அன்னக்கிளி, பொன்னுத்துரை, நல்லம்மா ஆகியோரின் சகோதரனுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2001) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு இவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
கோ.சுதந்திரபாலன் *(மகன்)*
***G.S.B** தொலைத்தொடர்பகம்,*
*பாப்பையா கடைச் சந்தி,*
*யாழ்ப்பாணம்.*

தொலைபேசி : 021 - 3220
தொலை நகல் : 021 - 3430

(85077)

## கணேசலிங்கம் கஜந்தன்

காரைநகர், பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் குட்சேட் றோட், வவுனியாவை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கணேசலிங்கம் கஜந்தன் நேற்று 7.3.2001 வவுனியாவில் அகால மரணமானார்.

இவர் கணேசலிங்கம்-சந்திரகலா தம்பதிகளின் புதல்வனும் கஜேந்திரனின் சகோதரனும் ஆவார்.அன்னாரின் பூதவுடல் நேற்று 7.3.2001 வவுனியாவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பயிரிக் கூடல்,*
*காரைநகர்.*

தகவல்:
ஆ.தியாகலிங்கம்
(சிறிய தந்தை)

(85071)

## நல்லதம்பி விக்கினேஸ்வரன் (செட்டி)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மணியர்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி விக்கினேஸ்வரன் (செட்டி) நேற்று (07.03.2001) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நல்லதம்பி - ஆச்சியம்மா ஆகியோரின் கனிஷ்ட புதல்வனும் நடராசா - மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை) சதீஸ்சரணின் பாசமிகு தந்தையும் நாகநாதன், லில்லிமலர் ஆகியோரின் அன்புத் தம்பியும், Dr. K.பாலசுப்பிரமணியம், வரதராசா, புஷ்பராசா (ஆசிரியர் யாழ்.கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), கலையரசி, அபராஜிதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2001) வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி வி.மங்கையர்கரசி
(மனைவி)

*மணியர்பதி வீதி,*
*கொக்குவில்.*

(85080)

## திருமதி கந்தையா அன்னப்பிள்ளை

அல்வாய் கிழக்கைச் சேர்ந்த திருமதி கந்தையா அன்னப்பிள்ளை கடந்த 04.03.2001 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், சரஸ்வதி, வடிவேலு, இராசலட்சுமி, நாகம்மா (லண்டன்), இராசரத்தினம், காலஞ்சென்ற சாமுவேல், பாக்கியம், காலஞ்சென்ற மனோன்மணி ஆகியோரின் அன்புத் தாயாரும் கதிரவேல்,ஆனந்த வடிவேல், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (அரசினர் வைத்தியாசலை, மல்லாவி), காலஞ்சென்ற கற்பகநாதன், தவமணி (பத்தமேனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.03.2001 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவஜீபவனம்,*
*கண்டாவத்தை,*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.*

தகவல்:
திருமதி சரஸ்வதி கதிரவேல்


(C/15600)

# யாழ்.வண்ணை கன்னாதிட்டி

# அருள்மிகு ஸ்ரீ காளி அம்பாள் ஆலய

## தேர்த்திருவிழாச் சிறப்பிதழ் - 08.03.2001

## பக்தர்களுக்கு அருள் சொரியும் ஸ்ரீ பத்திரகாளி அன்னை



## ஸ்ரீ காளியம்பாளின் திருவருள் பெருகுக!

யாழ்ப்பாணம், திருவண்ணை நகர், கன்னாதிட்டி வாழ் அடியார்க்கு நல்லன் குறப்பதியில் (பன்னீர் மரத்தை தலவிருட்சமாக விளங்கிய பதியில்) வீற்றிருக்கும் ஸ்ரீ விஸ்வேஸ்வரி, ஸ்ரீ காமாட்சி என்று அழைக்கப்பெறும் அருள் மிகு ஸ்ரீ காளியம்பாளுக்கு இன்று மாசி மக உன்னத நன்னாளில் புதிய இரதோற்சவம் நடைபெறுவது சிறப்பாக அமைகின்றது.

இரதமானது சிற்ப சாஸ்திரத்தின்படி சிற்பாசாரியரின் கைவண்ணத்தில் அற்புதமாக அமைவதாகும். பூதபார் முதல் சிம்மாசனம் வரையும் சிற்ப சாஸ்திரத்திற்கமைவாகவும் ஆலய வரலாறு, தெய்வங்களின் சக்தியின் திருவிளையாடல்கள் முதலான சொல்லப்பட்ட சிற்பங்கள் அமையும். அதன் மேல் முடிவரையும் சிற்பாசாரியரின் கற்பனைத்திறமையின் அடிப்படையில் அமையும்.



அம்பிகையின் அழகானது மிகவும் சிறப்பானதும் "மகாதிசய சௌந்தர்ய லாவண்யாயை நம!" "சகஸ்ராதி சௌந்தர்ய சரீராயை நம" என நாமங்கள் அம்பாளின் அழகை விதந்து உரைக்கின்ற அன்னையின் சித்திர இரதமானது எப்பேர்ப்பட்ட அதிசுந்தர அழகாக அன்னையின் அருளால் அமைந்திருப்பது மிகவும் வியக்கத்தக்கதாகும்.

அம்பாளின் சித்திரத்தேரில் சித்திரப் பவனி வரும் சிருங்காரக் காட்சியை சகல சௌபாக்கியங்களும் பெற்று சிறந்த வாழ்வு பெறவும் உலகனைத்தும் இயற்கையினதும், செயற்கையினதும் அனர்த்தங்கள் நீங்கி அனைவரும் சுபீட்சமாக நல்வாழ்வு வாழவும் அம்பிகை திருவருள் புரிய வேண்டி அவள் திருக்தாள்களையே பணிவோமாக.

"அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்,
நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு"

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

**பிரம்மஸ்ரீ. ந. தாமோதரஐயர்**
ஆலய பிரதம குரு

## மகோற்சவக் குருக்களின் ஆசி

ஒன்பது கோணங்களில் வீற்று இருக்கும் அன்னை லலிதாம்பிகையின் வடிவில் அமைந்து அருள் பாலித்துக் கொண்டு இருக்கும் காளிகாதேவியின் தேவஸ்தானத்தில் மாசி மாதத்தில் மக நட்சத்திரத்தில் சிவ சக்தி ஐக்கிய ரூபமாக விளங்குகின்ற காளிகா தேவி புதிய சித்திர ரதத்தில் பவனி வந்து விஸ்வ பிரம்மகுல மக்களுக்கும் மற்றும் பக்த அடியார்கள் எல்லோர்க்கும் அம்பிகையில் திருவருட் சக்தியால் சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல காளிகா தேவியைப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

மஹோற்சவ பிரதம குரு சிவாகம கிரியா ஜோதி கான விநோதன்
**சிவஸ்ரீ சோ.வரதராசக்குருக்கள்**
*(புளியங்கூடல் இந்தன் முத்துவிநாயகர் தேவஸ்தானம் பிரதம குரு, யாழ்.வண்ணை கலட்டி கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிரதம குரு)*

## ஓங்கார நாயகியே உன்தாள் சரணம்!

உன்னாமம் உச்சரித்தால் உள்ளமெலாம் உருகிடுமே
ஓங்கார நாயகியே உன்தாள் சரணம் அம்மா!
சொன்னா லினித்திடுமே சொர்க்கமே கிடைத்திடுமே
ஜோதிஸ்வரூபியே சொர்ணாம்பிகைத் தாயே!
கன்னாதிட்டி வளர் காளிகாதேவி அம்பிகையே
கரங்கூப்பி வணங்குகின்றோம் கனகாம்பரியே!
என்னா வியுள்ளவரை இதயத்தாமரையின் கண்ணே
இருத்தினேன் தாயே! காத்தருள் வாயே!

**தேரேறி வந்தே தீவினை போக்கிடுவாய்**

சிந்தனையிலுன்னையே சிறப்பாக அமர்த்திவைத்தேன்
ஸ்ரீ காளி தேவியே நின்தாள் சரணம் அம்மா!
வந்தனை செய்து நான் வாழ்த்தியே துதித்து நின்றேன்
வரமருளவாராய் ஸ்ரீ லலிதாம்பிகையே!
கந்தனை ப்பயந்த காளி கருணை செய்வாய் நீயே!
கன்னா திட்டியுறை கருணாகரியே!
உந்தனை ப்பணிந்தோம் உலகத்து நாயகியே
தேரேறி வந்தே தீவினை போக்கிடுவாய்!

**தேர்வடம் பிடித்திழுத்தோம் தேவியே சரணம்!**

கருணை மிகுந்த காளிகாதேவி கற்பகவல்லி நீயே
கால்பிடித்தேன் காத்தருள்வாய் கனகாம்பிகையே!
பெருமை மிகு கன்னாதிட்டியில் வளர் பெருமாட்டி நீயே
தேர்வடம் பிடித்திழுத்தோம் தேவியே சரணம்!
தருண மிது தாயே தயை செய்வாய் நீயே தயங்காது
அருள்மழை பொழிந்தெமை ஆதரிப்பாய் அம்மா!
வருமிடுக்கண் களைந்து வாழவைப்பாய் தேவி
வடிவேலெடுத்து வல்வினை போக்கிடுவாய்!

- சைவப்புலவர் "கவிமணி"
**இராசையா ஸ்ரீதரன்**

(C/15596)


அழகிற் சிறந்த ஆபரணங்களை தெரிவு செய்ய சிறந்த ஸ்தாபனம்
**நந்தினி நகை மாடம்**
218G - கஸ்தூரியார் வீதி, யாழ்.

தரம் குன்றா நகைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் முன் நிற்பவர்கள்
**லலிதா ஜுவல்லரி**
213B, கஸ்தூரியார் வீதி, யாழ். T.P: 2863.

**சாரங்கா நகை மாடம்**
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்.
கிளை:
அருள் முருகன் நகையகம் 96/1, கஸ்தூரியார் வீதி,யாழ்.
**சிவா நகை மாடம்** யாழ் வீதி, சாவகச்சேரி.

அசல் 22 கரட் தங்க நகைகளையும் நவீன டிசைன்களில் பெற
**நதியா ஜுவல்லறி**
தங்கப்பவுண் நகை வியாபாரம்
இல.2(167A), கஸ்தூரியார் வீதி, யாழ்.

கன்னாதிட்டி வீதியிலே அடியார்களுக்கு அருள் பாலிக்க நீண்ட காலத்தின் பின் இன்று தேரேறி வரும் அருள்மிகு காளியம்பாளின் தரிசனம் காணக் கண்ணாயிரம் வேண்டி வாரீர்.....
**சாணுகா நகை மாடம்**
200G, கஸ்தூரியார் வீதி, யாழ்.

அழகிற்சிறந்த நகைகளுக்கு நாட வேண்டிய இடம்:-
**சிறீ நதியா நகை மாளிகை**
2G, ஸ்ரான்லி வீதி, யாழ். T.P.No: 2709.
கிளை நிறுவனம்:
**சிறீ நதியா நகை மாளிகை**
56, கஸ்தூரியார் வீதி, யாழ்.

நம்பிக்கை, நாணயம் மிகுந்த நகை தயாரிப்பாளர்கள் நவீன புத்தம்புதிய டிசைன்களில் தயாரித்தளிப்பவர்கள்!
**அர்ச்சனா ஜுவல்லர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி, யாழ்.

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம்
**மதனா ஜுவல்லறி**
தங்கப்பவுண் நகைவியாபாரம்
177/3 கஸ்தூரியார் வீதி, யாழ்.

தரம் குன்றா தங்க நகைகளுக்கு அனைவரும் நாட வேண்டிய ஸ்தாபனம்
**விநோ நகைப் பூங்கா**
தங்கப்பவுண் நகைவியாபாரம்
185, கஸ்தூரியார் வீதி, யாழ்.

22 கரட் தங்க நகைகளை விரும்பிய டிசைன்களில் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்:-
**சிங்கப்பூர் ஜுவல்லறி**
93, கஸ்தூரியார் வீதி, யாழ்.

நவீன மோஸ்தர்களில் நகைகளை கட்டிங் செய்து தருபவர்கள்
**ஆர்.ஜி.மெஷின் கட்டிங்**
273, கஸ்தூரியார் வீதி, யாழ்.

சிறந்த தரமான சிற்றுண்டி வகைகளுக்கும் ருசிமிக்க உணவுக்கும்
**சாந்தி கபே**
கஸ்தூரியார் வீதி, யாழ்.

நவ நாகரிகமான நகைகளை நயமுடன் பெறுவதற்கு நம்பிக்கையானவர்கள்
**இரத்தினம் நகைத் தொழிலகம்**
கணேசா ஒழுங்கை, 190/7 கஸ்தூரியார் வீதி, யாழ்.

**கணேசா நகையகம்**
194, கஸ்தூரியார் வீதி, யாழ்.
கிளைகள்: **கணேசா நகையகம்**
123, பஜார் வீதி, வவுனியா. T.P 24-22464.
**யா/கணேசா நகையகம்**
124, செட்டியார் தெரு, கொழும்பு - 11 T.P 336252.

எழில் குன்றா அழகிய தங்கப்பவுன் நகைகளை ஓடர் கொடுத்து செய்து பெற்றிட
**தயா நகைப் பூங்கா**
213C, கஸ்தூரியார் வீதி, யாழ்.

# யாழ்.பல்கலைக்கழக மூத்த பேராசான்
# பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் அவர்களின்
# சேவைநலன் பாராட்டுவிழாச் சிறப்பிதழ் 08.03.2001

## வாழ்ந்து காட்டியவர்

யாழ்பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட நாள் முதலாக இற்றைவரை விலங்கியற்றுறைப் பேராசிரியராக விளங்கி பல நூற்றுக்கணக்கான மாணவ மாணவியர் வாழ்வுபெற வாழ்ந்து காட்டிய வள்ளல் உயர்திரு பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் அவர்களை மேலும் பல்லாண்டு வாழ்ந்து மக்களுக்கு வழிகாட்டியாக வாழ்கவென ஆசி கூறுகின்றோம். தமது கொள்கைகளைத் தாமே கடைப்பிடித்து வாழ்ந்து காட்டிய காந்தி மகானைப்போல தம் அனுபவத்தில் கண்டறிந்த கொள்கைகளைத் தம் மாணவரும் உணரும் வகையாக அன்பாலும், அறிவாலும், பண்பாலும் உணரச் செய்து உய்வளித்து உலகம் போற்ற உதவிய உத்தமர் உலகமாகிய பல்கலைக்கழகத்தில் ஆன்மீகப் பயிரை ஓங்கி வளரச்செய்து மேன்மையடைவாராக!

அன்பு ஓம் சிவ.

**அ.செல்லத்துரை சுவாமிகள்**
தலைவர், சிவதொண்டன் சபை.

*434, கே.கே.எஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

## துறைத் தலைவரின் வாழ்த்துரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் விலங்கியற்றுறை முதுபெரும் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் 26 வருட கனிந்த சேவையின்பின் ஓய்வு பெறுகிறார். இவர் ஏறக்குறைய 20 வருடங்கள் எமது துறையின் தலைவராகவும் இரு தடவைகள் விஞ்ஞானபீடாதிபதியாகவும் பதில் துணைவேந்தராகவும் கடமையாற்றியுள்ளார்.

எளிமையான அடக்கமான தோற்றத்தில் பல்வேறுவிதமான திறமைகளை தன்னுள் அடக்கி மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் சமூகத்தினதும் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்தவர்.

அவரது ஆசிரியப்பணி, நிர்வாகத் திறமை, பிரச்சினைகளைக் கையாளும் தன்மை ஒவ்வொருவர் உள்ளத்திலும் பசுமரத்தாணிபோல் என்றென்றும் பதிந்து நிற்கும்.

யாழ்.குடாநாட்டுச் சமூகத்தின் அறிவுப் பசிக்கு விருந்திட்ட இவர் பல்வேறு சமூக, பொது அமைப்புகளின் தலைவராக, நிர்வாகியாக, இருந்து சமுதாயத்திற்கு ஆற்றிய பொதுத் தொண்டுகள் எண்ணற்றவை; அளவிடமுடியாதவை. இன்றும் தொடர்கின்றன.

பேராசிரியரின் ஓய்வுக்காலம் சிறப்பானதாகவும் பயனுள்ளதாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி (திருமதி) பத்மினி கிருஷ்ணராஜா,**
துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளரும்.

## மாணவர் மனதிலிருந்து...

எமது ஈழத்திருநாட்டின் கலங்கரை விளக்காக விளங்கும் விலங்கியற்துறை பேராசான் பெரும் மதிப்புக்குரிய பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் அவர்கள் ஓய்வுபெறும் இந்நாளில் அவரின் நீண்டநாள் சேவைக்கு நன்றிகூறி வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றோம்

இவர் தமிழ் அன்னை பட்ட துயர்கண்டு தன் கல்விச்சேவையுடன் நின்று விடாமல் அத்துயர் துடைத்து தமிழ் மக்களுக்கு நல்வழி காட்டியவர். இந்நாட்டின் சூழ்நிலை காரணமாக – வெளிநாடு சென்ற தனது குடும்பத்துடன் சென்று சுகபோகவாழ்க்கையை அனுபவிப்பதை விடுத்து தமிழ் மாணவர்களினதும், தமிழ் மக்களினதும் நலனுக்காக கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக எளிமையான தனது தோற்றத்துடன் சேவையாற்றியவர். பேராசானின் அன்பான பேச்சையும் கனிவான பார்வையையும் சிரிப்புடன் கூடிய கல்வியூட்டலையும் இந்த தமிழ் மாணவர்கள் மறக்கமாட்டார்கள்.

'ஓய்வு' என்ற சொல்லை மறந்து சேவையாற்றிய எமது பேராசான் ஓய்வு பெறும் இவ்வேளையில் வாழ்த்தி விடைகூறுவதுடன் என்றுமே உடல் தோற்றமுடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம்**



## பேராசிரியர் வாழ்நாளில்...

பிறப்பு - 01-06-1935

**கல்வித்தகைமை**

| | |
|---|---|
| B.Sc. Hons (Cey.) | - 1962 இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பு. |
| M.Sc. (Hawai) | - 1965 ஹவாய்ப் பல்கலைக்கழகம், அமெரிக்கா. |
| Ph.D (Lond.) | - 1970 பல்கலைக்கழகக் கல்லூரி, லண்டன். |

**வாழ்க்கைத் தொழில் (Profession)**

* *செய்முறைக்காட்டுநர் - 1962 - 63*
  இலங்கைப் பல்கலைக்கழகம் - கொழும்பு.
* *உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) - 1963 - 65*
  இலங்கைப் பல்கலைக்கழகம் - பேராதேனியா.
* *விலங்கியல் விரிவுரையாளர் - 1970 - 75*
  இலங்கைப் பல்கலைக்கழகம் - பேராதேனியா.
* *விலங்கியல் பேராசிரியர் (தாபகர்) - 01-08-1975*
  இலங்கைப் பல்கலைக்கழகம் - யாழ்ப்பாண வளாகம்
* *விலங்கியற்றுறைத் தலைவர் - 1975*
  இலங்கைப் பல்கலைக்கழகம் - யாழ்ப்பாண வளாகம்
* *சிரேஷ்ட விலங்கியல் பேராசிரியர் - 1985*
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
* *விஞ்ஞான பீடாதிபதி*
  *(இரு தடவைகள்) - 1988 - 91; 1996 - 99*
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(9ஆம் பக்கம் பார்க்க)

## துணைவேந்தரின் செய்தி

பேராசிரியர் அவர்கள் சித்திரை மாதம் 2001 ஆம் ஆண்டு தனது 41 வருட சேவையின்பின் இளைப்பாறுகிறார்.

தனது முதலாவது பட்டப்படிப்பை இலங்கை சர்வகலாசாலையிலும், அதன்பின்பு ஹவாய் சர்வ கலாசாலையில் முதுமாணிப் பட்டத்தையும் லண்டன் சர்வ கலாசாலையில் தத்துவஞானி பட்டத்தையும் பெற்றவர்.

இவர் சிறந்த பல புத்தகங்களை வெளியிட்டுள்ளார். இவர் வெளியிட்டுள்ள ஆக்கங்கள் சர்வதேச பதிப்பகங்களிலும் வெளியிடப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். இவர் ஒரு சமூகத் தொண்டனும் கூட.

திரு வீ.கே.அவர்கள் இலங்கை விஞ்ஞான சங்கத்தில் கூடிய அக்கறை எடுத்துள்ளார். 1970 – 1980 ஆண்டு காலப்பகுதியில்

(9ஆம் பக்கம் பார்க்க)

## அர்ப்பணிப்பு மிக்க செயல்வீரன்

பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக, விரிவுரையாளராக பத்து ஆண்டுகளும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக, முதுநிலைப் பேராசிரியராக, விலங்கியற்றுறைத் தலைவராக, விஞ்ஞான பீடாதிபதியாக, பதில் துணைவேந்தராக பல்வேறு நிலைகளில் இருபத்தாறு ஆண்டுகளும் அளப்பரிய சேவையாற்றியபின் 02.04.2001 அன்று ஓய்வுபெறுகிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னோடிகளில் ஒருவரான பேராசிரியர் கணேசலிங்கம் அவர்கள் 1975 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழக யாழ்.வளாகத்தில் முதலாவது விலங்கியற்றுறைப் பேராசிரியராகவும் அத்துறைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டது முதல் அத்துறையையும் விஞ்ஞான பீடத்தையும் வளர்த்தெடுக்க அயயாது உழைத்தவர்.

(9ஆம் பக்கம் பார்க்க)

## நூலகரின் வாழ்த்துப் பா

ஏழ் ஐந்து ஆண்டுகள் முன்
அன்பார்ந்த தோழியின் துணையாய் - பேராதனைதனில்
அறிமுகமான நாள் முதலாய் உங்கள்
அறிவார்ந்த செயற்பாடுகளையும்
கண் துஞ்சாக் கடமையுணர்வையும்
பல்கலைக்கழக எல்லைகள் தாண்டி
விரிந்திட்ட சேவைத்திறத்தையும்
வியந்து நான் நோக்குகின்றேன்,

இம்மண்ணில் பட்டங்கள் பதவிபெற்றோர்
தம் வாழ்க்கைத் - திட்டமே சுகவாழ்வென்று
மண் துறந்தோடும் நாளில்
கற்று நீ உணர்ந்த தெல்லாம்
கால்பட்ட மண்ணுக்கீந்து
நாற்றுக்கள் தருக்களாகிப்
பயன்தர மனங்களித்தாய்
நூலக சேவையொன்றே
உயிர்நாடி உயர் கல்விக்கென்று
நூலக வளம் சிறக்க
உவப்புடன் உன் பங்கேற்றாய்.

நீண்ட நாள் ஆயுள் பெற்று
நிறை நலம் எல்லாம் பெற்று
இன்றே போய் செயற்றிறனும்
இளமை மிகு மனமும் பெற்று
நற்சேவை நாட்டுக் காற்றி
இல்லறம் இனிதியற்ற
வல்லவன் உமையின் பாகன்
மலர்ப் பாதம் வேண்டுகின்றேன்.

**திருமதி ரோ.பரராஜசிங்கம்**
-நூலகர்-


**சுபாஸ் பேக்கரி**
நெல்லியடிச் சந்தி, நெல்லியடி.

**அன்னலிங்கம் தேநீரகம்**
பல்கலைக்கழகம் முன்பாக, திருநெல்வேலி.

**குகன் ஸ்ரூடியோ**
பருத்தித்துறை.

**சிற்றி கொமினிக்கேசன்**
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

**அமுல் கிறீம் ஹவுஸ்**
ஆஸ்பத்திரி முன்பாக, ஆஸ்பத்திரி வீதி.

**VATHRY CRAFT, VATHRY.**

**ஜெயா நகை மாடம்**
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

**அல்பா மிக்சர்**
பலாலி வீதி, திருநெல்வேலி.

**சிவன் கிறீம் ஹவுஸ்**
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி

**கலைவாணி நகை மாடம்**
அழகிற் சிறந்த தங்க நகைகளுக்குச் சிறந்த இடம்
பிரதான வீதி, பருத்தித்துறை.

**ஈஸ்வரி நகையகம்**
பிரதான வீதி, பருத்தித்துறை.

**சுவர்ண மஹால்**
தங்கப் பவுண் நகை வியாபாரம்
பிரதான வீதி, நெல்லியடி.

# வெளிநாடுகளில் உயர்கல்வி பெறுவது இலகுவானதா?

யாழ்ப்பாணக் கலாசாரத்தைக் கந்தபுராணக் கலாசாரம் என்று சொல்லுவார்கள். வள்ளுவப் பெருந்தகையின் பொய்யா மொழிகளையும் யாழ்ப்பாண மக்கள் ஏற்றொழுகி வந்தனர் என்று கூறலாம். 1330 அருங் குறள்களையும் ஏற்றார்களோ இல்லையோ.

*'கண்ணுடையர் என்பர் கற்றோர், முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லாதவர்'*

என்ற குறளை அவர்கள் நன்கு மதித்தார்கள் என்று மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லலாம். வேறு பிற தேசங்களோடும் நாடுகளோடும் ஒப்பிடும்போது கல்வியாளருக்கான சமூக அந்தஸ்து யாழ்ப்பாணத்திலும் பொதுவாக தமிழ்ச சமூகத்திலும் அதிகமாகவே இருந்து வந்திருக்கிறது. குருகுலக் கல்வி முறை வழக்கொழிந்து, ஆங்கிலக் கல்வியும், விஞ்ஞானக் கல்வியும் வளர்ந்த காலத்தில் மேலைத் தேசத்தில் சிறந்தோங்கிய அறிவுச் செல்வத்தைத் தமது நாட்டுக்குக் கொண்டுவந்து சேர்க்கவேண்டிய தேவை தமிழ்ச் சமூகத்துக்கு எழுந்தது. அன்னாளில் தோன்றிய மகாகவி பாரதி

*புத்தம் புதிய கலைகள் - மற்று*
*பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்*
*மெத்த வளருது மேற்கே...*
*சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்*
*செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்*

- என்று முழங்கினான்.

இந் நாளில் எமது தமிழ் மைந்தர்கள், திரை கடல் ஓடி கல்வியாகிய திரவியம் தேடி வருகின்றனர். ஆயினும் சமீப காலமாக யாழ்.குடாநாடு வெளியுலகத் தொடர்புகள் குறைந்ததோர் இடமாக மாறிவருவதால், யாழ்ப்பாணத்தின் திறமைமிக்க மாணவர்கள் பலர் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்குச்

> **வெளிநாடுகளுக்குச் சென்று உயர் கல்வி பெற வசதி வாய்ப்புக்கள் கிடைக்காதா என ஏங்கும் நமது மாணவர்களுக்கு அதற்கான வாய்ப்புகளையும், வசதிகளையும் தெளிவுபடுத்துகிறது இக் கட்டுரை.**
>
> **அண்மையில் ஆஸ்திரேலியா பல்கலைக்கழகத்தில் இருந்து விடுமுறையில் தாயகம் வந்த மகேந்திரராஜா பிரவீணன் என்ற உயர்கல்வி மாணவன் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆற்றிய உரையின் தொகுப்பு இது.**
>
> **ஸ்கந்தவரோதயக் கல்லூரி கலை வர்த்தக மன்றத்தின் ஏற்பாட்டில் கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் மாணவன் பிரவீணன் உரையாற்றியிருந்தார். இவர் 1999 ஆம் ஆண்டு நடந்த ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் அகில இலங்கையில் சிறந்த பெறுபேறு பெற்றவராவார்.**

சென்று தம்மை வளப்படுத்திக்கொள்வதற்கு வழிவகை தெரியாதவர்களாக இருக்கின்றனர்.

வெளிநாட்டுக் கல்வியானது குறிப்பாக விஞ்ஞானத்துறைகளிலே பல சாதகமான அம்சங்களைக் கொண்டிருக்கின்றது. அவ்வவ் துறைகளிலே உலக ரீதியில் முன்னணி வகிப்பவர்களின் விரிவுரைகள், நவீன தொழில்நுட்ப வசதிகள், பாகுபாடு அற்ற கவனிப்பு, ஆளுமை விருத்திக்கான சந்தர்ப்பங்கள், தன்நம்பிக்கை, பரந்த உலகப்பார்வை என்பவற்றை அது வழங்குகிறது. இத்தகு சந்தர்ப்பங்களைப் பேணுவதற்கான வழிகளைக் காட்டுவதும் அது தொடர்பான பிழையான கருத்துக்களை நீக்குவதும் இக் கட்டுரையின் நோக்கங்களாகும்.

வெளிநாட்டுக் கல்வி என்றதும் பொதுவாக மாணவர் பலர் கேட்கும் கேள்வி "உள்ளூர்க் கல்வித் தகுதிகளுடன் வெளிநாட்டுப் பல்கலைக் கழகம் ஒன்றுக்கு அனுமதி பெறலாமா?" என்பதாகும்.

'ஆம்' என்பதே விடை!

## மாணவருக்கு சில ஆலோசனைகள்

இவ்வாறு அனுமதி பெறுவதற்கு லண்டன உயர்தரப் பரீட்சை அல்லது கேம்பிறிச் நுழைவுப் பரீட்சை எழுதியிருக்க வேண்டுமா? என்று கேட்கிறார்கள். இல்லை! ஆனால் உள்ளூர்ப் பரீட்சைகளிலிருந்து தெரிவு செய்யப்படுவதற்கு சற்றே உயர்ந்த பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படக் கூடும். குறிப்பிட்ட பல்கலைக்கழகம் அல்லது கல்லூரியின் தராதரம் சர்வதேச மாணவர்களை அனுமதிக்கும் அளவு என்பவற்றாலும் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் மாறுபடும். இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் பல்கலைக்கழகங்கள் பல சாதாரணமாக இலங்கையில் பல்கலைக்கழகத்துக்குச் செல்லக் கூடிய தகுதிகளைப் பெற்ற மாணவர்களை உள்வாங்கும். ஒக்ஸ்போட், கேம்பிறிச் போன்ற மிகப் புகழ்பெற்ற பல்கலைக் கழகங்கள் அதி விசேட சித்தி பெற்றவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கக்கூடும். அதே வேளை இந்தியாவில் உள்ள சில பல்கலைக்கழகங்கள் கல்லூரிகள் இங்கிலாந்தில் உள்ள 'பொலி ரெக்னிக்' கல்லூரிகள், ஆஸ்திரேலியாவின் TAFE கல்லூரிகள் போன்றவை 2C, S போன்ற சாதாரண பெறுபேறுகளுடன் அல்லது ஜி.சீ.ஈ. சாதாரண பெறுபேறுகளுடன் மாணவர்களை உள்ளெடுக்கின்றன.

கல்வித் தகுதியைவிட ஆங்கிலத் தகுதியே பல மாணவர்களுக்கு பொதுவாகப் பிரச்சினையாக உள்ளது. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் கல்வி நிறுவனங்கள் எல்லாம் ஆங்கிலத்தில் கல்வி புகட்டுவதனால், IELTS அல்லது TOEFL ஆங்கிலப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை எதிர்பார்க்கின்றன. எதிர்பார்க்கப்படும் தராதரம் கல்வி நிறுவனம், பாடநெறி என்பவற்றைப் பொறுத்து வேறுபடும். பொதுவாக இங்கிலாந்து ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகங்கள் IELTS பரீட்சையில் ஒன்பதுக்கு 5.5 தொடக்கம் 6.0 புள்ளிகளை அல்லது TOEFL பரீட்சையில் முன்னூறுக்கு 213 தொடக்கம் 237 வரையான புள்ளிகளை எதிர்பார்க்கின்றன. சில பல்கலைக் கழகங்கள் இதை வற்புறுத்தாவிட்டாலும் அந்தந்த நாட்டுத் தூதரகங்கள் இத் தகுதிகள் இல்லாதோருக்கு விசா வழங்குவதில்லை.

அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் SAT - I SAT - II போன்ற பரீட்சைகளின் சித்தியை எதிர்பார்க்கின்றன. எனினும் பல பல்கலைக்கழகங்கள் குறிப்பிட்ட தகுதியைவிட சற்றே குறைவாகப் பெற்றிருப்போருக்கு விசேட ஆங்கிலப் பயிற்சி நெறிகளை வழங்கி அவர்களை இணைத்துக்கொள்கின்றன.

### வெளிநாட்டுக் கல்வி மோகம்

பொதுவாக வெளிநாட்டிலே கல்வி கற்க வேண்டும் என்ற மோகம் இன்று வசதிபடைத்த இலங்கை மாணவர்களைப் பீடித்திருக்கின்றது. இதனால் தாம் செல்லப்போகும் கல்வி நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டதா? தரமான கல்வியை அது வழங்குமா? போன்ற விடயங்களை அவர்கள் ஆராயத் தவறிவிடுகின்றனர். பகுதி நேர வேலைகள் பற்றியும் இவர்கள் தவறான அபிப்பிராயம் கொண்டிருக்கின்றனர். பொதுவாகத் தரமான நிறுவனமொன்றில் கற்கும் எந்தவொரு பிள்ளைக்கும் பகுதிநேர வேலை மூலம் தனது முழுக் கல்விச் செலவையும் உழைக்க முடியாது. அவ்வாறு நம்பி அல்லது போலிக் கல்வி முகவர்களால் நம்பவைக்கப்பட்டு வெளிநாடு சென்ற பல மாணவர்கள் சீரழிந்துகொண்டிருக்கின்றனர்.

பொதுவரக கல்லூரி என்ற பெயரோடு இருக்கும் (இம்பீரியல் கல்லூரி போன்றவை விதிவிலக்கு) நிறுவனங்கள் பல்கலைக்கழகக் கல்வியை வழங்கமாட்டா.

அடுத்து நம்மவர்கள் பொதுவாகக் கேட்கும் கேள்வி. செலவைப் பற்றியதாகும். வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் எதுவும் இலவசக்கல்வி நடைமுறையில் இல்லை. எனவே பல்கலைக்கழகக் கட்டணம் வாழ்க்கைச் செலவு என இருவகையான செலவுகளுக்கு மாணவர்கள் ஈடுகொடுக்க வேண்டும். வெளிநாட்டுக் குடியுரிமை பெற்றவர்களுக்கான கட்டணத்தைவிட சர்வதேச மாணவர்களுக்கான கட்டணம் இரண்டு மூன்றுமடங்கு அதிகமாக இருக்கும் என்பதையும் கவனிக்க வேண்டும். இங்கிலாந்தில் பல்கலைக்கழகக் கட்டணம் வருடத்துக்கு 10 லட்சம் ரூபா (எமது பணத்தில்) வரையிலும் வாழ்க்கைச் செலவுகள் வருடத்துக்கு 6 லட்சம் ரூபா வரையிலும் ஆகலாம். ஆஸ்திரேலியாவில் பல்கலைக் கழகக் கட்டணம் வருடத்துக்கு ஆறரை லட்சம் ரூபாவும் வாழ்க்கைச் செலவுகள் நான்கரை முதல் 6 லட்சம் ரூபா வரையிலும் ஆகலாம்.

ஒரு மாணவன் பகுதிநேர வேலைகள் மூலம் தனது வாழ்க்கைச் செலவுக்கான பணத்தை உழைத்துக்கொள்ள முடியும்.

### ஏமாற்றும் முகவர்கள்

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இதைப்போன்ற பாதிச் செலவுடன் கற்கலாம். இந்தியா போன்றவற்றில் இன்னும் குறைவாக இருக்கும். வெளிநாட்டுக் கல்வியைப் பெற்றுத் தருவதாகக் கூறி கொழும்புப் பத்திரிகைகளில் பல விளம்பரங்கள் வருவதுண்டு. ஆனால் அந்த முகவர்கள் கொடுக்கும் கல்வி நிறுவனங்களின் தரம், அவர்கள் ஏற்பாடு செய்யும் பகுதிநேர வேலைகளின் தன்மை என்பவை குறித்து மாணவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

அடுத்து திறமையுள்ள மாணவர்கள் பெரும்பாலும் கேட்பது 'வெளிநாட்டுப் புலமைப்பரிசில் ஒன்றை எவ்வாறு பெற்றுக் கொள்வது? அதற்கான தகுதிகள் எவை? இப்போது எமது நாட்டில் மூன்று வகையான புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

1. அரசாங்கங்களால் வழங்கப்படும் புலமைப் பரிசில்கள்.
2. பல்வேறு நிறுவனங்கள், அமைப்புக்களால் வழங்கப்படும் புலமைப் பரிசில்கள்.
3. பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் புலமைப் பரிசில்கள்.

முதலாவது வகையிலே ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை சித்தியெய்திய மாணவர்களுக்கு ஜப்பான், சீனா, இந்தியா நாட்டு அரசுகள் புலமைப் பரிசில்களை வழங்குகின்றன. இலங்கை அரசு வெளிநாடுகளில் கல்வி கற்பதற்காக பட்டப்பின் படிப்புப் புலமைப் பரிசில்களை வழங்குகிறது. இவற்றைப் பெறுகின்ற மாணவர்கள் கற்கும் பல்கலைக்கழகங்களின் தரம் உச்சமானது எனச் சொல்லமுடியாது. ஆனால் இப் புலமைப் பரிசில்கள் மாணவர்களின் கல்வி, வாழ்க்கைச் செலவுகள் எல்லாவற்றையும் - பல சந்தர்ப்பங்களில் விமானக் கட்டணங்களையும் - பொறுப்பேற்கின்றன. இலங்கையில் சாதாரணமாகப் பல்கலைக் கழகம் போகக்கூடிய மாணவர் ஒருவர் இந்தியப் புலமைப் பரிசிலைப் பெற கணிசமான சந்தர்ப்பம் உண்டு. அறுபதுக்கும் மேற்பட்ட சராசரிப் புள்ளிகளை உயர்தரப் பரீட்சையில் பெற்றவர்கள் இதற்கு விண் ணப்பிக்க முடியும். வருடாந்தம் வருகின்ற பத்திரிகை விளம் பரங்களிலும் அந்தந்த நாட்டுத் தூதரகங்களிலும் மேலதிக விவரங்களைப் பெறலாம்.

கொமன் வெல்த், கொழும்புத் திட்டம் போன்ற அமைப்புக்களும், பல அரச சார்பற்ற நிறுவனங்களும் கூட புலமைப்பரிசில்களை வழங்குகின்றன. இதைப் பெரும்பாலும் பட்டப்பின் படிப்புகளுக்கானவை. இலங்கைப் பல்கலைக்கழகங்களில் முதல் வகுப்புச் சித்திபெற்றவர்கள் இவற்றுககு விண்ணப்பிக்க முடியும். வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் அனுமதிபெற்ற பின்னரே புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கலாம். இவை மாணவரின் எல்லாவிதமான செலவுகளையும் ஏற்றுக்கொள்பவையாகும்.

சமீப காலத்தில் இலங்கையில் உயர்தரம் சித்திபெற்ற திறமையான மாணவர்கள் பெற்றுக்கொள்வது பல்கலைக் கழகங்களின் புலமைப் பரிசில்களாகும். 'ஒக்ஸ்போட்' பல்கலைக்கழகம் உலகில் அதி உச்சத் திறமை வாய்ந்த 50 மாணவர்களுக்கு வருடந்தோறும் புலமைப் பரிசில் வழங்குகிறது. இங்கிலாந்தின் ஹல் (Hull) லீட்ஸ் (Leeds) போன்ற பல்கலைக்கழகங்கள் படிப்புச் செலவிற்கான புலமைப்பரிசில்களை வழங்குகின்றன. University College Of London (U.C.L.) போன்றவை அரைப் புலமைப் பரிசில்களை வழங்குகின்றன.

ஆஸ்திரேலியாவில் அடிலெய்ட் பல்கலைக்கழகம் (Adilaide) பூரண புலமைப் பரிசில்களையும் ஆஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம் (ANU) கேட்டிம் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் (University oh Technology) போன்றவை படிப்புச் செலவுக்கான புலமைப்பரிசில்களையும் வழங்குகின்றன.

இவற்றைப் பெறுவதற்கு எல்லாப் பாடங்களிலும் 'ஏ' சித்தியுடன் சிறந்த தேசிய நிலைகளும் தேவைப்படுகின்றன. குடும்பச் சூழலும் கவனத்தில் எடுக்கப்படுகிறது. சில புலமைப் பரிசில்களுக்கு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. வேறு சிலவற்றுக்கு செயற் றிட்டம் (Project) ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றது. மருத்துவத்துறைக்குப் பொதுவாக புலமைப் பரிசில்கள் வழங்கப்படுவது குறைவு.



மாணவன் ம.பிரவீணன்

பல்கலைக்கழகங்களுக்கும் புலமைப் பரிசில்களுக்கும் விண்ணப்பிப்பதற்கு - துரதிஷ்ட வசமாக - கொழும்பிலேயே வசதிகள் உள்ளன. யாழ்ப்பாணத்தில் இருந்தபடி தொடர்பாடலை மேற்கொள்வது சாத்தியமில்லை.

பம்பலப்பிட்டியில் அல்பிரட் ஹவுஸ் கார்டனில் அமைந்துள்ள பிரிட்டிஷ் கவுன்ஸில் இங்கிலாந்துப் பல்கலைக்கழகங்கள் தொடர்பான விவரங்களைத் தருகிறது. பிளவர் வீதி, கொழும்பு - 07 இல் அமைந்துள்ள 'அமெரிக்கன் சென்ரர்' இல் அமெரிக்க உயர்கல்வி சம்பந்த மான தகவல்களைப் பெறலாம்.

றோஸ்மீற் பிளேஸ், கொழும்பு - 07 இல் அமைந்துள்ள 'எட்லொகேற்', காலி வீதி, பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள **IDP**, ஆஸ்திரேலியா போன்ற பல நிறுவனங்கள் ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகங்களுக்கு வழிகாட்டுகின்றன. அந்தந்த நாட்டுத் தூதரகங்கள் மூலமாகவும் கல்வி அமைச்சு அலுவலகத்திலும் மேலதிக விவரங்களைப் பெறலாம்.

### விசா பெறுவதில் தாமதம்

ஒரு பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற அல்லது புலமைப் பரிசில் பெற்ற ஒருவருக்குக் கூட சிலவேளை அந்த நாட்டுக்குள் செல்வதற்கான 'விசா' கிடைக்காது போகக் கூடும். ஒரு 'விசா' விண்ணப்பத்தை தூதரகங்கள் பரிசீலனை செய்வதற்கு ஒரு மாதத்துக்கு மேல் எடுக்கும். அந்த நபருக்கு பாரதூரமான நோய்கள் ஏதும் உண்டா என்பதும் குறித்த அளவு பணம் வங்கியில் இருப்பதாக அத்தாட்சிப் படுத்தப் பட்டுள்ளதா என்பதும் நுணுக்கமாக ஆராயப்படும். தேவையான ஆவணங்கள் அனைத்தையும் ஒரே தடவையில் சமர்ப்பிப்பதன் மூலம் கால தாமதத்தையும் அலைச்சல்களையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

இறுதியாக ஒன்றைத் தெளிவுபடுத்த வேண்டும். நம்மவர்கள் பொதுவாக வெளிநாடுகளுக்குச் செல்லும்போது அது கல்விக்காக இருந்தாலென்ன வேலைதேடிச் சென்றாலென்ன ஒருவிதமான வெளிநாட்டு மாயையில் மூழ்கியவர்களாகக் காணப்படுகிறார்கள். வெளிநாட்டுக்குள் செல்வதையே வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு வாழும் எத்தனையோ இளைஞர்களைக் காண்கிறோம். பொதுவாக கடும் உழைப்பையும் இயந்திர வாழ்க்கையையும் வெளிநாட்டுக் கலாசாரங்கள் வேண்டி நிற்கின்றன.

இலங்கையிலே 'கௌரவத்'தோடு வாழ்ந்த பலர் பிற நாடுகளில் பணத்துக்காக எப்படிப்பட்ட வேலைகளையும் செய்யத் தயாராக உள்ளனர். பிற நாட்டுத் தமிழ் மக்களிடம் தாய் நாட்டைப் பற்றிய ஏக்கமும் தாய் நாட்டை விட்டுவிட்டு வந்ததால் ஒரு குற்ற உணர்வும் உள்ளன. இதனால் இலங்கையில் உள்ளவர்களுக்கு ஏதாவது வகையில் உதவ அவர்கள் விரும்புகின்றனர்.

ஆனால் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் மாணவர்கள் அந்த நாட்டுக் கல்விச் சமூகத்துடனும் அங்குள்ள தமிழ் சமூகத்துடனும் ஒரே சமயத்தில் இணைந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுகின்றனர். இந்த இருமுக வாழ்வில் அவர்கள் தங்கள் ஆளுமையை பெருமளவு வளர்த்துக் கொள்ளமுடியும். அனேகமான பல்கலைக்கழகங்களில் மௌனக கழகம் தொடக்கம் மலையேறும் கழகம் 'மார்ஷல் ஆர்ட்' கழகங்கள் என பல்வேறு கழகங்களும் கிளப்களும் இயங்கி வருகின்றன. இங்கிலாந்திலும் ஆஸ்திரேலியாவிலும் உள்ள சில பல்கலைக்கழகங்கள் வதிவிடக் கல்லூரிகளை (**Residential College**) கொண்டிருப்பதால் இவற்றுள் வரும் மாணவர்கள் ஒரே சமூகமாக இருந்து தமது ஆளுமைகளை வளர்த்துக்கொள்ளுகின்றனர்.

எமது மாணவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் தரும் கல்வி வசதிகளைப் பயன்படுத்திப் படித்து எமது நாட்டுக்குத் திரும்பி எமது சமுதாய உயர்வுக்கு வழிகாட்ட வேண்டும் என்று இறைவனை இறைஞ்சுகின்றோம். ✪

## சாயி சிந்தனை



இறைவனிடம் எதையும் நீங்கள் கேட்க வேண்டியதில்லை. உங்களுக்கு தூய இதயம் மட்டும் இருக்குமானால், அவரே உங்களது தேவைகளைப் பூர்த்தி செய்வார். எங்ஙனம் தாய் தன் குழந்தையின் தேவைகளைக் கேட்காமலே செய்வாளோ அதேபோல, குழந்தையைப் போல இருங்கள். தெய்வீகமான இறைவி உங்களைக் கவனித்துக்கொள்வாள். அதுதான்

### குழந்தையைப் போல இருங்கள்

முழுமையான சரணாகதி. சிறிய சிறிய விஷயங்களை எல்லாம் விரும்பிக் கேட்கா தீர்கள். ஏனெனில் அவள் அருகாமையை தவறவிட்டுவிடுவீர் கள். உணவு கேட்பவனுக்கு மையலறைக்குச் செல்ல வழிகாட்டப்படும். ஆனால் கேட்கத் தெரியாத குழந்தைக்கு தாய் உணவளிப்பாள். அகங்காரம் உள்ளவரும், இவ்வுலகியல் வாழ் விலேயே ஊறித் திளைப்பவரும்தான் கேட்பார்கள். ஆனால் தெய்வீகத் தாயிடம் அவளது சங்கல்பத்துக்கு அடிபணிந்து சரணாகதி செய்யும் குழந்தை போன்றவன் அமைதியாக வாழ்வான்.

'சனாதன சாரதி' - ஜனவரி 2000.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முத்த பேராசான்
**பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் அவர்களின்**
*பிரிவுபசார விழா அழைப்பு*

காலம் : இன்று (08-03-2001) வியாழக்கிழமை பிற்பகல் 3.30மணி
இடம் : யாழ்.கைலாசபதி கலையரங்கம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்

ஆதரவு தந்து வாழ்த்துவோர்:-

| | |
|---|---|
| E.S.P. குறூப், | No.50, கஸ்தூரியார் வீதி. |
| சன்லைற் றைக்கிளினர்ஸ், | No.23, பஸ்நிலையம். |
| கல்யாணி கிறீம் கவுஸ், | No.73, கஸ்தூரியார் வீதி. |
| ராஜா கிறீம் ஹவுஸ், | No.36, கஸ்தூரியார் வீதி. |
| நிஷானந்தா ஜுவல்லறி, | No.75, கஸ்தூரியார் வீதி. |

(85042)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 - 01 - 1981



உதிர்வு 18 - 02 - 2000

## செல்வன் செல்வரட்ணம் சுகந்தன்

ஆயிரம் காலத்தவப் பயனாய்
இறைவன் அளித்த வரமாய் - எமக்கொரு
அண்ணனாக நீ வந்தாய்!
என் மகனாகச் சற்றும் மனந்தளராது
மகிழ்வுடன் வாழ்ந்து விட்டு
திடீரெனச் சென்றது ஏன்?

*ஊரெழு மேற்கு, சுன்னாகம்.* (85019) உன்பிரிவால் துயருறும்: **குடும்பத்தினர்.**

# அமெரிக்க நீதிமன்றம் நிராகரிப்பு

வாஷிங்டன்,மார்ச்8

அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் குர்திஷ்தான் மக்கள் கட்சி ஆகியவற்றுக்கு ஆதரவு வழங்குவதற்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை அமெரிக்க உயர் நீதிமன்றம் நிராகரித்து விட்டது.

மேற்படி மனுவை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களும், குர்திஷ்தான் மக்கள் கட்சியின் ஆதரவாளர்களும் தாக்கல் செய்திருந்தனர். (ஐ-7)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்8

புலவர் ம.பார்வதிநாதசிவத்தின் 'பசிப்பிணி மருத்துவன்' கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம் பெறும். (ம-10)

## மிதி வெடி விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்8

யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர்களின் ஏற்பாட்டில் யாழ.திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலையில் மிதிவெடி விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இன்று காலையும் இக்கருத்தரங்கு தொடர்ந்து நடைபெறவுள்ளது. (ம-5)


நாளை ஆரம்பம்
(காலை 9.00 மணி)
* A/L General English
* G.A.Q. Exam
* வேலை பார்ப்போர்
*ஆகியவர்களுக்கான*
**ENGLISH KNOWLEDGE**
By:- G.பாலமுருகன்
**N.C.I.** மானிப்பாய். (85012)




உ

**சுன்னாகம் அருள்மிகு பழநி ஆண்டவர் ஆலய**

# 17ஆம் ஆண்டு பூர்த்தி விழா

மேற்படி ஆலயம் அமைக்கப்பெற்று 17 ஆண்டுகளின் பூர்த்தி விழாவானது இன்று (08-03-2001) வியாழக்கிழமை நடைபெறும். விஷேட அபிஷேக பூஜைகளுடனும்; அதனைத் தொடர்ந்து அன்னதான நிகழ்வுடனும் நடைபெறும் இப்பூர்த்தி விழாவுக்கு அடியார்கள் அனைவரும் வந்து கலந்து முருகன் அருள் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C/15582) - முருகன் அடியார்கள்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் முத்துக்குமாரு இராசரத்தினம்

(முன்னாள் காசாளர் - யாழ்.ஐக்கிய வியாபாரச் சங்கம்)

மண்ணுலகில்:1927.09.27 விண்ணுலகில்:2000.02.18

**திதி: 2001.03.08**

அன்புத் தந்தையே! எங்கள் குடும்பத்தின்
ஒளி விளக்கே! அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் வாழவைத்த அப்பா!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஓராண்டு என்ன ஆண்டுகள் பல சென்றாலும்
உங்களை எங்கள் நெஞ்சங்கள் என்றும் மறவாது.....

*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*சித்தன்கேணி.* (84750) அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

# யாழ்.பல்கலைக்கழக மூத்த பேராசான் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் அவர்களின் சேவைநலன் பாராட்டுவிழாச் சிறப்பிதழ்

## 08.03.2001

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

## துணைவேந்தரின்....

விஞ்ஞான கழகத்தின் விஞ்ஞான நிகழ்ச்சி திட்டத்துக்கு தமிழ்ப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்தவர். யாழ்ப்பாணத்தில் விஞ்ஞானக் கழகத்திற்கு திரு.வீ.கே.அவர்கள் வித்திட்டவர் என்றால் மிகையாகாது. அவருடைய விடாமுயற்சியினால் ஸ்ரீலங்காவில் ஒரு முன்னணி பிராந்திய சங்கமாக உருவாக்கிய பெருமை திரு.வீ.கே அவர்களைச் சாரும். திரு.வீ.கே.அவர்கள் விலங்கியல் பேராசிரியராக 2 வருடங்களுக்கு மேலாக யாழ். பல்கலைக்கழகத்தில் கடமையாற்றியுள்ளார். அது மட்டுமன்றி விலங்கியல் பகுதித் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். விஞ்ஞான பீடாதிபதியாகவும் ஒருகால கட்டத்தில் பதில் உபவேந்தராகவும் தலைவராகவும் பேரவை அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையில் நீண்டகாலமாகக் கடமையாற்றியுள்ளார்.

பேராசிரியர் வீ.கே.அவர்கள் பல்கலைக்கழகத்திற்கும் சமூகத்திற்கும் ஆற்றிய சேவை அளப்பரியது. அவர் நீண்ட சுகத்துடன் வாழவேண்டுமென வாழ்த்துகிறேன்.

**பொ.பாலசுந்தரம்பிள்ளை**
**துணைவேந்தர்.**

## அர்ப்பணிப்பு மிக்க....

பேராசிரியர் கணேசலிங்கம் அவர்கள் ஒரு சிறந்த விரிவுரையாளராக மாணவர்களால் போற்றப்படுபவர். அவரது ஆய்வுத்திறமை பல ஆய்வுக்கட்டுரைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இரு கால இடைவெளிகளில் பேராசிரியர் கணேசலிங்கம் அவர்கள் விஞ்ஞான பீடத்தை அதன் பீடாதிபதியாக வழிநடத்தியுள்ளார். முதலாவது 1988 சித்திரைக்கும் 1991 மாசிக்கும் இடைப்பட்ட காலம். இது இந்திய சமாதானப் படையினர் இராணுவ நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணத்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்த காலம். அப்போது பல்கலைக்கழக சொத்துகளுக்குப் பெரும் சேதமேற்பட்டு அதன் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது 1995 மார்கழிக்கும் 1999 கார்த்திகைக்கும் இடைப்பட்ட காலம். இது 1995 ஐப்பசி இடப்பெயர்வுக்குப் பின்னர் நாம் யாழ்ப்பாணம் திரும்பிவந்து பல்கலைக்கழக ஆய்வு கூடங்களிலிருந்த கோடிக்கணக்கான ரூபா பெறுமதிமிக்க உபகரணங்களையெல்லாம் இழந்திருந்த சமயம். இவ்விரு நெருக்கடியான காலகட்டங்களிலும் பேராசிரியர் கணேசலிங்கம் அவர்கள் தளர்வுறாது தன்னாலானவற்றையெல்லாம் செய்து விஞ்ஞான பீடத்தை மீண்டும் கட்டியெழுப்புவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்துள்ளார். அவரது அர்ப்பணிப்பு மிக்க சேவையை விஞ்ஞான பீடம் போற்றிப் பாராட்டுகிறது.

பேராசிரியர் கணேசலிங்கம் அவர்களின் சேவையைப் பாராட்டி விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தினர் இன்று எடுக்கும் பிரியாவிடை விழா சிறப்புடன் நடைபெற வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர் இ.குமாரவடிவேல்**
**விஞ்ஞான பீடாதிபதி**

## பேராசிரியர் வாழ்நாளில்...

*☆ பதில் துணை வேந்தர் - 1988*
(4 மாதங்கள்) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### புலமைப்பரிசில்களும் புத்தாய்வு ஆதரவூதியமும்
(Scholarship & Fellowship)

| | | |
|---|---|---|
| East West Centre Scholarship | 1963 - 1965 | (University of Hawaii, U.S.A) |
| Probationary Study Leave Grant | 1967 - 1970 | (University of London, U.K) |
| Commonwealth Fellowship | 1978 - 1979 | (University of Wales, U.K) |
| COSTED Fellowship | 1984 - one month | (University of Baroda, India) |
| GTZ(Germany) Fellowship | 1986 - one month | (ICIPE, Nairobi, Kenya) |
| Royal Society Fellowship | 1986 - 1987 | (Imperial College, U.K) |
| British Council Fellowship | 1990 - one month | (Natural History Museum, London, U.K) |
| Family Planning Fellowship | 1990 - one month | (India, Bangladesh, Thailand) |
| Study Leave Sponsorship | 1997 - Two months | (University College, London U.K) |

### இலங்கைப் பல்கலைக்கழகச் சேவை

தற்காலிகம் 2 வருடங்கள்
நிரந்தரம் 31 வருடங்கள்

*(மாணவனாக 1958இல் புகுந்து இற்றைவரை பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ளார்.)*

### விஞ்ஞானத்துறை சார்ந்த சேவைகள்

☆ இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் SLAAS - நிர்வாகக்குழு அங்கத்தவர் 1965
- தலைவர் - யாழ்.கிளை 1978 - 81
- விஞ்ஞான தின விழா அமைப்பாளர் 1978 - 1984

☆ ஆளுநர் சபை அங்கத்தவர் இலங்கை விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் - 1989 - 91
☆ யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் (JSA) - பொதுச்செயலர் 1990 - 93
தெரிவுத் தலைவர் 1997 - 98
தலைவர் 1998 - 99
☆ ஆராய்ச்சிக் குழு அங்கத்தவர்; பாகிஸ்தான் பூச்சியியல் சஞ்சிகை - 1983
☆ பேரவை அங்கத்தவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### தன் விருப்பார்வ சேவைகள்

☆ இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் (யாழ்.கிளை) கௌரவ செயலர் - 1993 - 97
தலைவர் 1997 - 2001 உபதலைவர் தேசிய தலைமைச் செயலகம்
☆ அரிமாக்கழகம், தலைவர் பருத்தித்துறை அரிமாக்கழகம் 1981
வலயத்தலைவர் - மாவட்டம் - 306B - 1980 பிரதி மாவட்ட ஆளுநர் 306B - 1982
☆ தலைவராக,
- பருத்தித்துறை பிரஜைகள் குழு - 1982 - 85
- குடும்பத் திட்டமிடல் சங்க யாழ்கிளை - 1981 - 84
- பருத்தித்துறை நுகர்வோர் சங்கம் - 1984 - 85
- யாழ்ப்பாண நுகர்வோர் சங்கம் - 1983
- இலங்கை சைவ மாமன்றம், பருத்தித்துறை - 1981
- பருத்தித்துறை வரி செலுத்துவோர் சங்கம் - 1989
- பருத்தித்துறை விலங்கு வேளாண்மை செய்வோர் சங்கம் - 1994
- பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம்
- யாழ்ப்பாண அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் - 1998

(C/15589)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள்கள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச ஊழியராகப் பணிபுரியும் 71இல் பிறந்த B.Sc., 71இல் பிறந்த சிவில் எஞ்சினியர், 64ல் பிறந்த எலக்ரிக் எஞ்சினியர் மணமகன்களுக்கு மணமகள்கள் தேவை. தொடர்பு:-"கிருஷ்ணா திருமண சேவை", T. சுப்பையா, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (85056)

## தவறிவிட்டது

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அம்பலவாணர் மதன்குமார் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.0901004737) 05-03-2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 105, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (85057)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மின்சாரத்தில் இயங்கும் WATER PUMP உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். A.சிவகுருநாதன், 102, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (84947)

## அபூர்வ ஜோதிடம்

இமயமலைச் சித்தர் ஏடு மூலம் மரணப்படுக்கையான நோயாளிகள் கூட வெற்றிகரமாகக் குணப்படல் அதிர்ஷ்டத்தை நோக்கிய வாழ்வு. சனி, ஞாயிறு 8.30-5.00p.m. தொடர்பு: ஆடியபாத வீதி, சரஸ்வதி மில் லேன், கொக்குவில் கிழக்கு. (85053)

## SPOKEN ENGLISH

சுலபமாக ஆங்கிலம் பயில தபால் மூலமும் (அரசில் பதிவு செய்து அங்கீகரிக்கப் பெற்ற தனியார் பாடசாலை) ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (84983)

## தவறிவிட்டது

வல்லியன் மகேந்திரன் என்பவருடைய வாகனச் சாரதிப் பத்திரம் கோப்பாய்க்கும் நீர்வேலிக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கோப்பாய் சந்தியில் உள்ள கிருஷ்ணபவான் தேநீர்க்கடையில் ஒப்படைத்துதவவும். (85060)

கனகலிங்கம் தீபா என்பவருடைய தே.அ.அட்டை (இல.7658993119V) விசேட அ.அ., யாழ்.பல்கலைக்கழக அ.அ. என்பன பிறவுண் றோட்டில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நம்பர் 3,பிறவுண் வீதியில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (85040)

இடம்பெயர்வு காரணமாக முக்கிய ஆவணங்களான வங்கி ஊழியர் சேமலாப நிதிய பத்திரங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஆவணங்களிலுள்ள விலாசமான அண்ணாமலை ஸ்ரீஸ்கந்தராஜா, நாவலர் பாடசாலை ஒழுங்கை, கோப்பாய் தெற்கு அல்லது சித்திராலயா ஸ்ருடியோ, 172, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (85015)

# யாழ்ப்பாணம், கன்னாதிட்டி

# அருள்மிகு அன்னை ஸ்ரீ காளியம்பாளின் தேர்த்திருவிழா

## இன்று (08-03-2001) வியாழக்கிழமை



*காளியம்பாள் தேரினிலே பவனிவந்து*
*அடியார்கள் குறை தீர்த்து*
*சாந்தியும், சமாதானமும் பெருக*
*அருள் பாலிக்க வேண்டியும்*
*தேர் உற்சவம் காணவரும்*
*அடியார்களையும் வாழ்த்தி நிற்பவர்கள்,*

| | |
|---|---|
| **ஜெய துர்க்கா நகைத்தொழிலகம்** ஸ்ரேசன் றோட், மல்லாகம் | **சுதா நகைத் தொழிலகம்** 90, சிவன்கோயில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். |
| **விஜயன் நகைத் தொழிலகம்** 58, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம் | **ஜதீசன் நகைத் தொழிலகம்** 233/2, கஸ்தூரியார் வீதி (உட்புறம்) யாழ்ப்பாணம். உரிமையாளர்: குலேன் |
| **தினேஸ் நகைத் தொழிலகம்** 53/7, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். | **சந்திரன் ஜுவல்லரி அன் ஜெம்ஸ் அன் நகைத் தொழிலகம்** 74/1, கஸ்தூரியார் வீதி (உட்புறம்) யாழ்ப்பாணம். |
| **ஓம் சக்தி நகைத் தொழிலகம்** டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம் | **ஸ்ரீ வெங்கடேஸ் நகைத் தொழிலகம்** 288/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| **சுரேஸ் நகைத் தொழிலகம்** 103, கஸ்தூரியார் வீதி,(மேல்மாடி) யாழ்ப்பாணம். | **சுவிஸ்ஸோ நகைத் தொழிலகம்** 44/1, யாழ்வீதி, யாழ்ப்பாணம். |
| **பன்னீர்ச் செல்வன் நகைத்தொழிலகம்** 203/12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். | **பாலகிருஷ்ணன் கம்பி மெசின் தொழிலகம்** 337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| **தேவன் நகைத் தொழிலகம்** 29, காரைக்காட்டுலேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். | **A. ஈஸ்வரன் நகைத் தொழிலகம்** 173/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| **சிவநேசன் நகைத் தொழிலகம்** 90, சிவன்கோயில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.. | **ஒலிம்பிக் நகைத் தொழிலகம்** திரு.சந்திரசேகரம் (சின்னமணி) 194/6 கஸ்தூரியார் வீதி (உட்புறம்) யாழ்ப்பாணம். |
| **ரமேஸ் நகைத் தொழிலகம்** 224/18, கஸ்தூரியார் வீதி, (பாரத் ஸ்ருடியோ ஓடை) யாழ்ப்பாணம். | **பவுணன் நகைத் தொழிலகம்** கஸ்தூரியார் வீதி, (உட்புறம்) யாழ்ப்பாணம். |
| **விஷ்ணு நகைத் தொழிலகம்** 224/3, கஸ்தூரியார் வீதி, (பாரத் ஸ்ருடியோ ஓடை) யாழ்ப்பாணம். | **விஜயபாஸ்கரன் நகைத் தொழிலகம்** கஸ்தூரியார் வீதி, (உட்புறம்) யாழ்ப்பாணம். |
| **பாபு நகைத் தொழிலகம்** 194, கஸ்தூரியார் வீதி, (உட்புறம்) யாழ்ப்பாணம். | **ரவீந்திரன் நகைத் தொழிலகம்** கஸ்தூரியார் வீதி, (மேல்மாடி) யாழ்ப்பாணம். (C/15598) |

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



# செல்வன் கஜதீபன்

## KAJATHEEPAN

08.03.2001

வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த **செல்வக்குமார் - சியகலா** தம்பதிகளின் செல்வப் புதல்வன் கஜதீபன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (08.03.2001) வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். கஜதீபனை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், மச்சாள்மார் மற்றும் நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் எல்லாம் வல்ல ஆண்டவன் அருள்பெற்று பல்கலையும் கற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:- சே.செல்வக்குமார் (அப்பா)
தலைவர்,
செவிப்புலன் வலுவற்றோர்
புனர்வாழ்வு நிறுவனம்.

*தற்போதைய முகவரி:*
*புற்றாளை, புலோலி.*

(85049)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது அலுவலகத்தில் பணியாற்றும்
பொது எழுதுநர் சேவை வகுப்பு I ஐச் சேர்ந்த
**திரு. [illegible]நாயகம் ஞானசீலன்** அவர்கள்
யாழ்.மாவட்டத்திற்கான சமாதானநீதிவானாக
நியமிக்கப்பட்டதையிட்டு
உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்,
*வலயக் கல்வி அலுவலகம்.*
*யாழ்ப்பாணம்.*

(85078)

# நெஞ்சை விட்டகலாத

# ஈராண்டு நினைவலைகள்

தோற்றம்
01
-
06
-
1949



மறைவு
01
-
03
-
1999

## அமரர் இராமகிருஷ்ணன் நாகராசா

திதி: 08.03.2001

**எங்கள் குடும்பத்தின் ஜீவ ஒளியாய் வாழ்ந்து**
**எம்மை கவலை என்னும் ஆழ்கடலில் தவிக்கவிட்டு**
**எங்கே சென்றுவிட்டீர்? எம் அன்புத் தெய்வமே!**
**ஈராண்டு சென்றாலும் அகலாது உங்கள் நினைவுகள்!**

*"லெட்சுமி வாசம்"*
*88/5C, கேசாவில் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

உங்கள் பிரிவால் துயருறும்
அம்மா, மனைவி, மக்கள்,
மருமக்கள், சகோதரர்கள்.

(85043)

# தையலர் தலை நிமிர்ந்து வாழ வேண்டும்

இன்று உலக மகளிர் தினமாகும். அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

தமிழர் வாழ்வில் சங்க காலத்தில் பெண்கள் சம உரிமையுடன் வாழ்ந்து வந்தனர். காக்கைபாடினியார், நச்செள்ளையார் முதலிய சங்க காலத்துப் பெண் புலவர்கள் இதற்குச் சான்றாக விளங்குகிறார்கள்.

இடைக் காலத்திலேதான் பாவையர் கல்வியும் உரிமையும் மறுக்கப்பட்டு அடக்கப்பட்டார்கள். படிப்பது பாவம் என்னும் பழி உரையால் சமுதாயத்தில் கடை நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். "பெண்களுக்கு எதைக் கொடுத்தாலும் கொடு, கல்வியறிவை மட்டும் கொடுத்து விடாதே" என்னும் ஆணாதிக்க மொழியால் முடக்கப்பட்டார்கள். சாதிப்பிரிவுகளால் சோபை இழந்து நலிந்தார்கள், சீதனக் கொடுமையால் எதிர்காலம் என்னாகுமோ என்று கவலைப்பட்டனர். விதவைகள் என்ற பெயரால் உடன்கட்டை ஏற்றப்பட்டார்கள். குழந்தை மணத்தால் குற்றுயிராக்கப்பட்டார்கள், பொருந்தா மணத்தால் புலம்பல், காதல் மணத் தடைகளால் தற்கொலைகள் என இன்று பெண்கள் பல கொடுமைகளை அனுபவித்து வருகின்றனர். அத்துடன் ஆணாதிக்க கலாசாரம் தலைவிரித்தாடும் பொழுது பெண்கள் வியாபாரப் பண்டமாகப் பயன்படுத்தப்பட்டுவருகிறார்கள்.

நுகர்வுப் பொருளாதார விளம்பரத்துறையில் ஆதிக்கம் செலுத்தும் ஆண்கள், பெண்களை விளம்பரங்களில் கவர்ச்சிப்பண்டமாகப் பாவிக்கின்றனர். அது மாத்திரமல்ல கலாசாரத்தின் பிரதான அம்சமான கலை, இலக்கியத்துறையிலும் ஆணாதிக்கம் தான் தலைதூக்கி நிற்கின்றது. சிறுகதை, நாவல்களின் முன் அட்டைகளைப் பார்த்தால் இது நன்றாகப் புலப்படும். விற்பனையாகின்ற அநேக நூல்களின்முன் அட்டைகளில் பெண்களின் கவர்ச்சிப் படங்கள், தான் காணப்படுகின்றன.

எமது பாரம் பரியத்திற்கும், பண்பாட்டிற்கும், கலாசாரத்திற்கும் ஒவ்வாதவகையில் பெண்குலத்தையே அவமானப்படுத்தி நவீன துச்சாதனர்கள் தங்களது விளம்பரங்களில் பெண்களை மையமாகப் பயன்படுத்தி துகிலுரி படலத்தையும் நடத்தி வருகின்றனர். பெண் குலத்தையே அவமானப்படுத்துகின்ற சீர்கெட்ட செயலைத் தட்டிக்கேட்க எவருமே முன்வருவதில்லை.

இதனிடையே சீதனம் என்றொரு வடம் பெண்ணினது இல்வாழ்க்கையை இறுகக் கட்டியுள்ளது. "மங்கையராகப் பிறப்பதற்கு பெரும் மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்று பாடி பெண்குலத்தை மேம்படுத்தினான் ஒரு கவிஞன். அது கற்பனை உலகக் கனவு இன்றைய யதார்த்த உலகினைப் பார்க்கும் போது. "மங்கையராகப் பிறப்பதற்கே பெரும் பாதகம் என்ன செய்தோமம்மா" என்று ஒப்பாரிபாடத்தான் தோன்றுகிறது.

பத்து மாதம் தன் வயிற்றில் சுமந்து பெற்றெடுத்தும் என்னபிள்ளை என்று அறிய அந்தத் தாய்மனம் துடியாய்த் துடிக்கிறது ஆணாக இருக்கக் கூடாதா இறைவா என்று ஏங்குகிறது. பிறந்தது பெண் பிள்ளை என்றால் போதும். கடவுளே... என்றபடி மூர்ச்சையாகிப் போகின்றாள் அந்தத் தாய். இதற்கும் மேல் அந்தப் பிள்ளையை இந்த உலகத்தை விட்டே அனுப்பி விட வேண்டும் என்று எண்ணுபவர்களும் இருக்கின்றார்கள். கசப்பானதாக இருந்தாலும் உண்மை நிலை இது தான்.

ஆண் பிறந்தால் ஐந்து லட்சத்திற்கு வரவுக் கணக்கு பெண் பிறந்தால் ஐந்து லட்சத்துக்குச் செலவுக் கணக்கு என்ற பழமொழி உழுத்துப் போன சமுதாயத்தின் பொன் முலாம் பூசப்பட்ட பெயர்ப் பலகை.

சீதனப் பிரச்சினையால் பெண் தன்னுடைய எதிர்காலம் என்னாகுமோ என்று கவலைப்படுகிறாள்பெற்றவர்கள் கவலைப்படுகிறார்கள். இவர்கள் மட்டுமல்ல பெண்ணுடன் பிறந்த ஆண்களும் கவலைப்படுகின்றார்கள் சகோதரிகளுக்கு உழைத்துக் கொடுக்க வேண்டும் என்று.

எனவே எல்லோரையுமே சஞ்சலத்திற்கும் கவலைக்கும் உள்ளாக்கும் இந்தச் சீதனத்திற்குக் காரணம் யார் என்று சிந்திக்க வேண்டும் அப்படிச் சிந்திக்கும் போது நாம் ஒவ்வொருவரும் நம்மையறிந்தோ அறியாமலோ காரணமாய் இருக்கிறோம் என்ற உண்மை புரியும்.

ஒரு பெண் மணப்பெண்ணாக இருக்கும் போது சீதனம் இல்லாததால் என் வாழ்வு மலரவில்லையே என்று ஏங்குகிறாள். அதே வேளை தன் தகுதிக்கு ஏற்ற மணமகனை மணந்து வாழவும் அவள் மனம் ஒப்புக்கொள்வதில்லை நாலு பேரைப் போல தானும் சகல வசதிகளுடனும் வாழ வேண்டும். அதற்குரிய சீதனத்தை தனது பெற்றோரோ சகோதரரோ தர வேண்டும் என்ற விருப்பமே அவள் மனதில் குடி கொள்கிறது.

அதே பெண் தாய் என்னும் பாத்திரமாக மாறும் போது சீதனக் கொடுமையால் பெண்ணை வாழ வைக்க முடியவில்லையே எனத்திட்டுகிறார்.

அதே பெண் மாப்பிள்ளையின் தாய் ஆகும் போது, தன் மகனுக்கு உச்சமான சீதனத்தை எதிர்பார்க்கிறார். தந்தையிலும் பார்க்கத் தாய் தான் இந்த விடயத்தில் கண்டிப்பாக இருப்பது கண்கூடு.

ஒரே பெண் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு குணாதிசயங்களை உடையவளாக இருக்கும் நிலையே சீதனப் பிரச்சினையை சிக்கலானதாக ஆக்குகின்றது.

ஆகவே எங்கள் ஒவ்வொருவர் மனப்பாங்கிலும் மாற்றம் ஏற்பட வேண்டும். மற்றவரைப் போல நானும் வாழ வேண்டும் எனும் போலி வாழ்வைக் கைவிட்டு "நான் எனக்கென்ற ஒரு வாழ்வை அமைப்பேன்" எனும் உறுதியும் செயற்திறனும் எம்மிடம் குடிகொள்ள வேண்டும்.

இன்று பெண் விடுதலைக்கென பல பெண்கள் தாமாக விடுதலை இயக்கங்களை அமைத்து போராடி ஓரளவு சுதந்திரம் என்ற நிலை உருவாகி வந்த போதும் இன்று எமது சமுதாயத்தில் உள்ள சில சிக்கல்கள், பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை இந்தப் பூரண சுதந்திரம் பெண்களுக்குக்கிடைக்குமா என்பது கேள்விக்குறிதான்.

வருடா வருடம் பெண்கள் தினத்தைக் கொண்டாடுவதோடு எமது கடமை முடிந்து விடுவதில்லை. இந்தத் தினத்தின் உண்மையான அர்த்தம் பற்றி நாம் ஆழமாகவே சிந்திக்க வேண்டும். பெண் விடுதலை தொடர்பாக சிந்திப்போர் ஊக்கம் பெறவும் நாடு தழுவிய ரீதியில் பெண்களின் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு பரவலாக்குவதற்கும் பெண்கள் தின நிகழ்வுகள் உதவ வேண்டும். பெண் விடுதலை தொடர்பான வெறும் கோஷங்கள் எழுப்புவதை விடுத்து ஆக்க பூர்வமான பணிகளில் நாம் ஈடுபட வேண்டும்!

பெண்களைச் சுற்றிப் பிணைக்கப்பட்டுள்ள அவளது உள்ளத்திற்கும், உடலுக்கும் துயரங்களை விளைவிக்கின்ற முட்கம்பிகள் அறுத்தெறியப்பட வேண்டும். அவள் பொருளாதாரத்திற்கும், பாதுகாப்பிற்கும் ஏனையோரைச் சார்ந்திருக்கும்நிலைமாறவேண்டும்.

"ஆணின்றிப் பெண்ணில்லை பெண்ணின்றி ஆணில்லைஇருவரும்சேர்ந்தே இகம்" என்ற நிலை உருவாகி, தரணியில் தமிழர் மீண்டும் பரணி பாடிடத் தையலர் தலை நிமிர்ந்து வாழ வேண்டும். ★

கம்சினி சண்முகரட்ணம்
( இராமநாதன் கல்லூரி )

## நங்கை நீ நஞ்சுண்டாயோ?

1. திருமணப் பருவம் ஆனால்
   சீர்வரிசையோ அவளுக்கில்லை
   இருபத்திரண்டில் பேசி
   இன்றோ சாப்பதினெட்டாய்ப் போச்சு!
   உருவமும் சிதைந்தே போக
   உள்ளமும் வெதும்பிப் போச்சு
   பருவமும் பிரிந்து போக
   படுக்கையில் வீழ்ந்தாள் நங்கை!
2. இனிய நெஞ்சத் தாளுக்கு
   இப்படி சோகமாச்சு
   தனிமையில் வாடும் பாவை
   தவித்தனள் இதனை யெண்ணி
   கனியெனத் திகழ்ந்த கன்னம்
   சருகாயென உலர்ந்து போச்சு
   இனி எனக்கென்ன வாழ்வு என்று
   ஏங்கியே மாண்டாள் மங்கை!
3. எலும்பதும் தோலும் வற்றி
   ஏந்திழை மாளை யெண்ணி
   வலுவிழந்து பொல்லை யூன்றி
   வயிற்றினில் தீயை மூட்டி
   அழுத்துப்போய் கண்ணாலந்த
   அழகியின் மணக்கோலம் காண
   உலுத்தரே! சீதனத்தைக் கேட்டு
   உலுக்கினீர் எங்கள் வாழ்வை
   குலத்திற்கு மணம் முடியாவிட்டால்
   குலப்பழி ஆகுமென்றோ?
   நலம் பெற குலத்தின் நாமம்,
   நஞ்சைநீ உண்டாயோ? சொல்!

மூ. திருநாவுக்கரசு
(முன்னாள் நீதிபதி)

## புதுமைகள் படைக்க எழுந்திடு நங்கை!

மானிடம் போற்ற வாழ்ந்திடு நங்கை - தமிழ்
மாண்புகள் சுமந்து வாழ்ந்திடு நங்கை
தீதுகள் விலக்கி வாழ்ந்திடு நங்கை
தெய்வமாய் உன்னை வாழ்த்திட நங்கை
பாதகம் கண்டு எழுந்திடு நங்கை
பாவையர் மாண்பைக் காத்திடு நங்கை
சாதனை புரிந்து உயர்ந்திடு நங்கை
செகத்தினில் புதுமைகள் படைத்திடு நங்கை

மதுரகவி காரை.எம். பி. அருளானந்தம்

## தென்னிந்திய திருச்சபைக்கு புதிய நிர்வாகம்

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். ஆதீன சபா சங்கத்திற்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆரம்பமாகிய வருடாந்தக் கூட்டம் மூன்று நாள்கள் நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே இத்தெரிவுகள் இடம் பெற்றன.

தலைவராக பேராயர் அதி வண. கலாநிதி எஸ். ஜெபநேசனும், செயலாளராக வண. ஜி. நடராசாவும், பொருளாளராக சி. ஜெயரட்ணமும், 21 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் (க-99)


## கண்ணீர் அஞ்சலி

கமநல சேவைகள்
திணைக்களத்தின் உதவி ஆணையாளர்
திரு. க. சுந்தரேசன்
அவர்களின் அன்பு மாமனார்

### கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை

அவர்கள் 06-03-2001 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு ஆறாத் துயரில் இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெரும்பாக உத்தியோகத்தர்,
கமநல கேந்திர நிலைய ஊழியர்கள்,
கமநல சேவைக்குழு,
விவசாய சம்மேளனங்கள்,
கமநல கேந்திர நிலையம்,
புத்தூர். (85081)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் சிவராசா செல்லம்மாவின் புத்திரன்

### இராஜேந்திரன்

[ஜேர்மனி முன்சன்]
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை (பிறப்பிடம்)

மலர்வு 08-02-1957 உதிர்வு 06-02-2001

என்றென்றும் எங்கள் நெஞ்சை விட்டு
அகலாது எங்களுக்கு
வழிகாட்டிய பாசத்தின் குலவிளக்கே!
எங்களை வாழ வைத்து உருவாக்கிய
எங்கள் அன்புத் தெய்வமே!
உங்களது நினைவுகள்
என்றென்றும் எங்கள் உள்ளத்தில்
நிலைத்து நிற்கும்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்னாரின் மரணச் செய்தியை அறிந்து எங்கள் துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (08—03—2001) வியாழக்கிழமை ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைச் சேர்ந்த பரமசாமி புஷ்பராணி இல்லத்திலும் 18/A, சிவன் கோயில் வீதி, சின்னப்புதுக்குளம் வவுனியாவைச் சேர்ந்த மு. கதிரவேலு என்பவரின் இல்லத்திலும் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்
மு. கதிரவேலு [மைத்துனர்]
18/A, சிவன் கோவில் வீதி,
சின்ன புதுக்குளம்,
வவுனியா. (சி/15599)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு. சி. நாகையா

(அதிபர், ஆனைக்கோட்டை அ. மி. த. க. பாடசாலை இயக்குநர் சபை உறுப்பினர், நவாலி Y M C A)

அவர்கள் அதிபர் தரம் 2 க்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம். நீண்ட காலமாக இயக்குநர் சபை உறுப்பினராக இருந்து எமது சங்கத்திற்குச் செய்த சேவையைத் தொடர்ந்தும் அவர் வழங்க இறைவன் அருள் புரிய வேண்டும் என்றும் நீடூழி வாழ வேண்டும் என்றும் வாழ்த்துகின்றோம்.

– நவாலி Y M.C.A.

(85070)

# கண்ணீர் அஞ்சலி

எமது யாழ் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் (பயிற்சியாளர்)

திரு. கோ. சித்திரகுமாரன்

அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி கோபாலரத்தினம் சசிகலா

அவர்கள் 05-03-2001 அன்று காலமானதையிட்டு கவலையினால் மனம் கலங்கி நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்.
அனைத்து உத்தியோகத்தர்களும்,
நலன்புரிச் சங்கம்,
யாழ். பிரதேச செயலகம்.

(85084)

# கண்ணீர்ப் பூக்கள்

யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர்

திரு. க. சுந்தரேசன்

அவர்களின் அன்பு மாமனார்

## கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை

அவர்கள் 06-03-2001 இல் இறைவடி சேர்ந்ததையிட்டுத் துயருறும் அன்னாரின் உறவினர்களுடன் நாமும் துயரத்தைப் பகிர்ந்துகொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கமநல கேந்திர நிலைய குழு உறுப்பினர்களும்,
கமநல கேந்திர நிலைய உத்தியோகத்தர்களும்,
விவசாய சம்மேளனங்களும்.

கமநல கேந்திர நிலையம்,
வேலணை. [85089]

# கேள்வி அறிவித்தல்

மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனை

சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்

## திருத்த வேலைகள்

பின்வரும் திருத்த வேலைகளுக்கு என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன. தகுதியான நிறுவனங்கள் ரூபா நூறினை (100/-) கேள்விப் பணமாகவும், ரூபா ஆயிரத்தினை (1000/-) கேள்விப்பிணைப்பணமாகவும் செலுத்தி 27-03-2001 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணி வரை கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் 28-03-2001 ஆந்திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். தபாலில் அனுப்பப்படுமாயின் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பாக மாட்டாது.

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### திருத்தங்கள்

1. லொறி முழுமையான இயந்திர, ரிங்கர் (Tinker) திருத்த வேலையும், வர்ணம் பூசுதலும்.
2. லொறி உடற்கோப்பு அமைத்தல் (Lorry Body Fitting)
3. உருக்குத் தளபாடத் திருத்தம்.

வைத்திய கலாநிதி
உ. சிவபாதசுந்தரம்
மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

சு. சே. மா. பி. ப. பணிமனை
இல. 08, கற்பகப் பிள்ளையார் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் (சி/15603)

# நிறுவனங்களை பதிவு செய்யக் கோரிக்கை

மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையங்கள், நகை அடகு பிடிக்கும் கடைகள், தனியார் கல்வி நிலையங்கள், தொலைத் தொடர்பு நிலையங்கள் போன்ற நிறுவனங்களை நடத்துவோர் யாழ் பொலீஸ் நிலையத்தில் அவற்றை பதிவு செய்யுமாறு யாழ். பொலீஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ். ஐ. ஆரியவன்சா கேட்டுள்ளார்.

எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அவற்றைப் பதிவு செய்து ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ஐ-5-6)

# வீதி திருத்த ஏற்பாடு

நீண்ட காலமாகத் திருத்தப்படாமலிருந்த சுழிபுரம் சத்தியகாட்டு வீதியைத் திருத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் நா. திரிலோகநாதன் தெரிவித்துள்ளார். (ஒ)

# மெய்வன்மைப் போட்டி

அராலி வள்ளியம்மை ஞானகார்த்த வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்கல் 2-30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் செ. புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் கலந்துகொள்கிறார். [ஒ]

★ ★ ★

யாழ்ப்பாணம்புனிதசாள்ஸ் மகாவித்தியாலயத்தின் மெய்வன்மைப்போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திருமதி பி.எஸ். சின்னத்துரை தலைமையில் நடைபெறும்

பிரதம விருந்தினராக அருட்திரு. ஏ. ஐ. பேணாட் அடிகளாரும், சிறப்பு விருந்தினர்களாக கோட்டக்கல்வி அதிகாரி ஏ. இராஜசோபா அும், கப்டன் டி. ஏ. எம். குணசிங்கமும்கலந்துகொள்ள வுள்ளனர். (ம-5)

★ ★ ★

கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் வே. சிவசிதம்பரம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக, போரூட் நிறுவனத் திட்ட இணைப்பாளர் என். கோகுலதாஸன் கலந்து கொள்வார். (க-109)

★ ★ ★

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் வே. பத்மநாதன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

வடமராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. அருளானந்தம் பிரதம விருந்தினராகக்கலந்துகொள்வார். (க-109)

★ ★ ★

யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழன் பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திருமதி தனரஞ்சனி துரைசிங்கம் தலைமையில் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக மக்கள் வங்கி முகாமையாளர் சிவகுரு பத்மநாதன் கலந்துகொள்வார். திருமதி கமலாதேவி பத்மநாதன் பரிசில் வழங்குவார். (க)

# விஞ்ஞானபாடக் கருத்தரங்கு

ஜி. சீ. ஈ. சாதாரண தரம் மற்றும் தரம் 10ஐச் சேர்ந்த மாணவர்களுக்கான இலவச விஞ்ஞான பாடக் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் சைவ கல்வி நிலையத்தில் நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கில் 'வரைபுகள்' தொடர்பாக ஆசிரியர் குமரனும், 'குழியவியல்' தொடர்பாக ஆசிரியர் வரதனும்விரிவுரையாற்றவுள்ளனர்.

இந்தக் கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களும் ஏனைய மாணவர்களும் இதில் கலந்து பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ-9)

# வாகன சாரதி அனுமதிப் பத்திரம்

பெறுவதற்கான

## வைத்திய சான்றிதழ் வழங்கல்

எமது வைத்திய ஆலோசனை நிலையத்தில் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான வைத்தியச் சான்றிதழ், மோட்டார் வாகன போக்குவரத்துப் பகுதியின் நிபந்தனைகளுக்கமைவாகப் பதிவு செய்யப்பட்ட வைத்திய நிபுணரால் வழங்கப்படும்.

எமது ஏனைய சேவைகள் யாழ். பிரபல வைத்திய நிபுணர்களால் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

1. பொது வைத்தியம்
2. தோல்
3. பல்
4. சத்திர சிகிச்சை ஆலோசனையும் சத்திரசிகிச்சையும்
5. குழந்தைகள் சிகிச்சை
6. கண் சிகிச்சை (சத்திரசிகிச்சையும்)
7. காது, மூக்கு, தொண்டை
8. ஈ. சி. ஜி. இரத்தம். சிறுநீர், மலம் பரிசோதனை வசதி

## E.N.T. & மெடிக்கல் கிளினிக்

24, முனீஸ்வரன் றோட், யாழ்ப்பாணம்.
(ஹட்டன் நஷனல் வங்கி அருகில்)
- யாழ். பஸ் நிலைய முன் ஒழுங்கை -

(85104)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளரான

திரு க. சுந்தரேசன் அவர்களின்

அன்பு மாமனார்

## கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்ப உறுப்பினருடனிணைந்து துயரத்தில் பங்கு கொண்டு எமது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவிப்பதுடன் எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

கமநல கேந்திர நிலையம், கமநல சேவைக் குழு,
புலோலி. கமநல கேந்திர நிலைய
(85087) உத்தியோகத்தர்கள்.

# அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு

## சுகவாழ்வு நிலையம்

நடத்திய

## சிறுகதைப் போட்டி முடிவுகள்

முதலாம் இடம்: ''அமாவாசை நிலவுகள்'' செல்வி ச. குமுதினி, 3ஆம் வருட மாணவி, யாழ். மருத்துவபீடம்.

இரண்டாம் இடம்: ''என்னவன் இராமனல்ல'' செல்வி சிறீஸ்கந்தராஜா சிவாணி, அம்மன் வீதி, கந்தர்மடம்.

மூன்றாம் இடம்: ''சரபங்க தொடரட்டும்'' செல்வி ச. சாரங்கா, பலாலி ஆசிரியர் கலாசாலை.

ஐந்து ஆறுதல் பரிசுகள்:-

★ ''புதியவளாய் பிறக்கின்றேன்'' செல்வி ஸாரா எரிக்கா லோறன்ஸ், 2002, கலைப்பிரிவு. யா/திருக்குடும்பக் கன்னியர் மடம், ஆங்கிலப் பாடசாலை.

★ ''கண்கள்'' செல்வி பிரேமினி சபாரட்ணம், நெல்லியடி, கரவெட்டி.

★ ''உயிர்ப்பு'' திரு உடுவில் அரவிந்தன், திருநெல்வேலி.

★ ''இனிப் பயமில்லை'' திரு தங்கராஜா பிரபாகரன், தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

★ ''ஏன் சம்மதம் கொடுத்தாள்'' திரு. த. செல்வகுமார், குப்பிளான் தெற்கு, ஏழாலை.

பரிசில்கள் 10-03-2001 அன்று கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் மகளிர் தின விழாவில் வழங்கப்படும்.

(85092) - செயலர்.

# இனப்பிரச்சினைக்கு ராணுவத் தீர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அஸ்லி வில்ஸ் நேற்று ஆற்றிய உரையில் தெரிவித்ததாவது:-

ஐக்கிய அமெரிக்கா ஒரு வல்லரசாக இருப்பதால், அனேக சந்தர்ப்பங்களில் அதன் மத்தியஸ்தத் தன்மை மிக அதிகமெனக் கொள்ளப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்த வரையில் அந்த நிலையே காணப்படுகிறது. அமெரிக்கர்கள் பலர் எனக்கு எழுதியுள்ள கடிதங்களில், அமெரிக்கா நினைத்தால் இங்குள்ள பிழைகளைச் சரியாக்கி விடலாம் என்ற கருத்துக் காணப்படுகின்றது.

அமெரிக்கா பயங்கரவாதத்துக்கு எதிராக உலகளாவிய ரீதியில் யுத்தத்தைப் பிரகடனப்படுத்தி உள்ளது. இலங்கையில் பயங்கரவாதிகளான விடுதலைப்புலிகள் தாக்குதல்களை நடத்துகிறார்கள். ஆகையால் அமெரிக்கா விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் போரைப் பிரகடனம் செய்ய வேண்டும் என்று இன்னும் சிலர் கடிதங்கள் எழுதுகிறார்கள்.

### இனப்பாகுபாட்டை அமெரிக்கா எதிர்க்கிறது

அமெரிக்கா இனப்பாகுபாட்டை எதிர்க்கிறது. இலங்கையில் தமிழ் மக்கள் மீது இனப்பாகுபாடு காட்டப்படுகிறது. அதனால் அமெரிக்கா தமிழீழம் உருவாகுவதை ஆதரிக்க வேண்டும் என்று வேறு சிலர் கடிதங்கள் எழுதுகிறார்கள்.

இலங்கையரின் வாழ்க்கையில் பயங்கரவாதம் அருவருப்பானது என்பதனை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அதேவேளை இலங்கை மக்கள் குறிப்பாக யாழ்ப்பாண மக்களும் வடக்கு-கிழக்கு மக்களும் இக்கலவரத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; அவர்களுக்குக் கிடைக்க வேண்டியவை கிடைக்கவில்லை என்பதும் எமக்குத் தெரியும். இந்த யுத்தம் ஆயிரக்கணக்கான சிங்களக் குடும்பங்களையும் பாதித்துள்ளது என்பதனையும் நான் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இலங்கையின் சிக்கலான பிரச்சினைக்கு இலகுவான தீர்வுகள் உண்டென்று எமக்குத் தென்படவில்லை.

அமெரிக்காவிலேயே - அதன் எல்லைக்குள்ளேயே - இன நெருக்கடிகள் நிலவும்போது அடுத்தவர்களுக்கு உபதேசிப்பதற்கு அந்த நாட்டுக்கு என்ன உரிமை இருக்கிறது என்று கேட்டும் கடிதங்களும் எமக்குக் கிடைக்கின்றன.

அமெரிக்காவை ஓர் அவியற்பானை எனலாம். அதற்குள் பல பண்பாடுகள் ஒன்று கலக்கின்றன. அங்கு அனேகமானோர் படித்தவர்கள். குழாய்களில் நன்னீர் சென்று மக்களுக்குப் பயன்படுவது போல அவர்களிடமிருந்து நல்ல கருத்துக்கள் வெளிப்படுகின்றன. எனினும் இப்போதும் கியூபா, ஹெயிற்றி மற்றும் பல நாடுகளில் இருந்து அகதிகள் அமெரிக்காவுக்குள் நுழைய முண்டியடிக்கின்றார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் அமெரிக்காவுக்கு உள்ள தார்மீகக் கடமை என்ன? அமெரிக்கா சர்வதேச விவகாரங்களில் ஈடுபாடு காட்டுவதில் உள்ள அக்கறையை இழந்தால், அது தனது உயிர்நாடியாகிய சமநிலையை இழந்ததாகிவிடும்.

எமது தார்மீக நியாயப்பாடு, இலங்கை குறித்து என்ன சொல்கிறது? அது எவ்வாறு எமது கொள்கையாக மாற்றம் பெறுகிறது. அமெரிக்காவின் பின்வரும் உத்தியோக பூர்வக் கருத்துக்களில் இருந்து இலங்கை குறித்த எமது அணுகுமுறை உருவாகிறது.





இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ் நேற்று சுண்டுக்குழியில் உள்ள யாழ். பொது நூலகத்துக்கு வருகை தந்த போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

அங்கு இடம்பெற்ற வைபவத்தில் தென்னிந்தியத் திருச்சபை ஆயர் அதிவண. எஸ். ஜெபநேசன் அறிமுக உரையாற்றுவதை முதல் படத்திலும் -

அமெரிக்கத் தூதர் வில்ஸ் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன், மனிதநேய அமைபுக்களின் பிரதிநிதி சு. பரமநாதன் ஆகியோருடன் உரையாடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படம்:- கொனிக்கா கலர் லாப்)*

### அமெரிக்க அணுகுமுறை

◆ இந்த யுத்தம் விரைவில் முடிவுக்கு வர வேண்டும்; எவ்வளவு விரைவாக வருகிறதோ அவ்வளவுக்கு நல்லது.

◆ இந்தப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வொன்று உண்டென்ற கருத்தை நாம் நிராகரிக்கிறோம். பேச்சுவார்த்தை மூலமான தீர்வையே நாம் ஆதரிக்கிறோம். (இதற்கு அரசியல் பற்றுறுதி தேவை. பேச்சுவார்த்தையில் எந்தத் தரப்பும் தோல்வியுற வேண்டியதில்லை. இருவருமே வெல்லலாம் என் பதில் எமக்கு நம்பிக்கை உண்டு.)

◆ இந்தப் போரினால் பொருளாதார இழப்புக்கள், உயிரிழப்பு, காயமுற்றோர், அகதிகளானோர் வகையிலான மனித இழப்புகள் என்பன உயர்ந்து கொண்டே போகின்றன. இவை இனியும் தாங்கமுடியாதவை; சகித்துக் கொள்ள முடியாதவை.

◆ இதனாலேயே நாமும் இந்தியா, ஐரோப்பிய சமூகம், ஜப்பான் மற்றும் பல நாடுகளும் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சுவார்த்தை நடை பெறுவதற்கான நோர்வேயின் உன்னத முயற்சியை ஆதரிக்கிறோம்.

◆ இலங்கையில் சுதந்திர தமிழ் நாடு ஒன்று பிரித்தெடுக்கப்படுவதை நாம் நிராகரிக்கிறோம்.

◆ தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத அமைப்பாகக் கருதுகிறோம். அத்தோடு அந்த அமைப்பே இலங்கைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதனையும் நாம் நம்பவில்லை.

◆ தமிழர்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதனையும் நாம் ஆதரிக்கிறோம். ஜனநாயக இலங்கையில் தமிழர் சமத்துவமாக நடத்தப்படவும், மதிப்புடனும், சுயமரியாதையுடனும் வாழ்வதற்கும் வகை செய்யப்பட வேண்டும். அதற்கான சரியான அரசியல் வடிவத்தை இந்த நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும்.

◆ இலங்கையோ அல்லது அதன் எந்தப் பிரதேசமோ எந்த இனத்துவக் குழுமத்தினதும் விசேட உரிமைக்கு உரியது என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை - ஏற்றுக் கொள்ளவில்லை. இலங்கை ஒரு பல்லின, பல் மத, பல் கலாசார நாடு என்றே நாம் கருதுகிறோம்.

இப்பிரச்சினைக்கான தீர்வை இலங்கையர்களே பேச்சுவார்த்தை மூலம் காணவேண்டும், காண முடியும் என்பதில் எமக்குத் திடமான நம்பிக்கை உண்டெனினும் பிரதான தரப்புகள் பொருத்தமானதெனக் கருதினால் நாம் உதவி செய்வதற்கும் தயாராக உள்ளோம்.

இவை, இலங்கைப் பிரச்சினை தொடர்பாக அமெரிக்க அரசாங்கத்தின் பிரதான - முக்கிய - கருத்துக்களாகும். அவற்றின் பெறுமதிக்கு ஏற்ப அவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்.

இது உங்களுடைய நாடு; எதிர்காலம் உங்களுடையது; இலங்கையராகிய நீங்களே எந்தத் திசையில் செல்ல வேண்டும் என்பதனைத் தீர்மானிக்க வேண்டும். ஆனால் ஒரு நீண்டகால நண்பன் என்ற வகையில் அமெரிக்கா இவற்றை உங்கள் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கிறது.

### புலிகள் பற்றிய பார்வை

அமெரிக்காவின் இந்த உத்தியோகபூர்வ பரந்த கருத்து வடிவமைப்புக்குள் பல நுட்பமான வேறுபாடுகள் இருக்கவே செய்யும். அவற்றில் ஒன்று விடுதலைப் புலிகள் குறித்த எமது பார்வையாகும். விடுதலைப் புலிகளை நாம் ஒரு பயங்கரவாத அமைப்பாகக் கருதும் அதேவேளை அவாகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று நம்பாவிட்டாலும் அந்த அமைப்பின் தலைவர்கள் பேச்சுவார்த்தைகளில் பங்காளர் என்பதனை ஏற்றுக் கொள்கிறோம். விடுதலைப் புலிகளின இராணுவ நிலைப்பாடே இதற்குக் காரணமாகும்.

இலங்கையில் சமாதானத்துக்கான நல்ல வாய்ப்புக்கள் உள்ளதை நான் காண்கின்றேன். எதிர்வரும் மாதங்கள் நம்பிக்கைக்கு உரியனவாகத் தெரிகின்றன.

தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், யுகோசிலாவியா, பெல்ஜியம், இந்தியா, அமெரிக்கா ஆகிய பல்லின மக்கள் வாழும் நாடுகளில் நான் பணிபுரிந்துள்ளேன். அந்த அனுபவங்களில் இருந்து இலங்கைப் பிரச்சினை தீர்வு காணக்கூடிய ஒன்று என நான் உணர்கிறேன்.

இந்த அழகான தீவில் நெடுங்காலமாக பல்வேறு இனங்கள் ஒன்றாக அமைதியான முறையில் வாழ்ந்துள்ளன. இந்த நாட்டின் பல இயல்புத் தன்மைக்கு உகந்ததாக, பரஸ்பரம் திருப்திதரக் கூடிய சமகாலத்துக்கான அரசியல் முறை ஒன்றை வகுப்பதே இன்றைய தேவையாகும்.

### தீவிர கருத்துக்கள்

இவ்வாறு நான் அதிர்ச்சி தரும் வகையில் கூறும்போது, இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் உள்ள கஷ்டங்களைக் குறைத்து மதிப்பிடுகிறேன் என்பதல்ல. சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் இனத் தீவிரவாதிகள் உள்ளனர் என்பது நிச்சயம். கொழும்பிலும் கண்டியிலும் உள்ள சிலர் இலங்கை சிங்களவருக்கு மட்டுமே சொந்தம் என்று என்னிடம் கூறியுள்ளனர். திருகோணமலையில், மட்டக்களப்பில், இங்கு யாழ்ப்பாணத்தில் வடக்கு - கிழக்கு இலங்கை, தமிழர்களின் தனித்தன்மையுள்ள பூமி எனக் கூறக் கேட்டிருக்கிறேன். இத்தகைய கருத்துக்கள் மிகவும் தீவிரவாதமானவை.

அமெரிக்கக் கொடியை மதிக்கும் ஒருவன் அதில் உள்ள சிவப்பு நிறத்தை மட்டுமே காண்பதை இது எனக்கு நினைவுபடுத்துகின்றது. தனது நாட்டுக் கொடியின் பல நிறங்களின் சிறப்பினை அவனால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. நான் உங்களுடைய நாடு குறித்து எல்லாம் தெரிந்தவன் அல்லன். இலங்கை - வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு - பல்லியல்புத் தன்மை உள்ள நாடாகும்.

எனது கருத்து தவறானதாக இருக்கலாம். இந்நாடு கூட்டியல்புடைய நாடு; இங்கு வாழும் மக்கள் சமாதானமாக சேர்ந்து வாழலாம் என்பதனை இலங்கையர்கள் அனேகர் ஏற்றுக் கொள்வர் என நம்புகின்றேன்.

தமிழர்களும் ஏனைய சிறுபான்மையினர்களும் இந்த நாட்டில் மதிப்புடையவர்களாகவும் பாதுகாப்பாகவும் வாழலாம் என்று உணரவைக்கக் கூடிய வழியை அரசாங்கம் கண்டுபிடிக்க வேண்டும். அதேவேளை பிரிவினை குறித்து கவலை கொள்வோருக்கு நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு பாதிக்கப்படமாட்டாது என்று உறுதியளிக்கக் கூடியதாகவும் அந்த வழிமுறை - தீர்வு அமைய வேண்டும்.

ஜனநாயகத்தை ஆதரிப்பதாக கூறும் சிலர், தனது தலைமைத்துவத்துக்கு எதிரானவர்களை கொன்ற சரித்திரத்தை உடைய விடுதலைப் புலிகளுக்கும் தமது ஆதரவு உண்டு எனச் சொல்லக் கேட்டிருக்கின்றேன்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஜனநாயக அரசியல், சாத்வீக அமைப்பாக மாற்ற முடியுமா? அது சாத்தியமானால் புலிகளின் கொடூரத்தனத்தை கண்டு அருவருத்தோரும், அதன் தந்திரங்களை எதிர்த்தோரும் - அமெரிக்கா உட்பட எல்லோரும் - அந்த அமைப்பு குறித்த கருத்தை மீள்பரிசீலனை செய்ய கடமைப்பட்டவர்கள் ஆவர். விடுதலைப் புலிகளின் சமீப கால நடத்தை உற்சாகமூட்டுவதனை நாம் நிச்சயம் ஏற்றுக் கொள்ளவேண்டும். சிவிலியன் இலக்குகளை தாக்குவதனை நிறுத்துவதோடு, யுத்த கால அடிப்படை விதிமுறைகளையும் அவர்கள் தொடர்ந்து கடைப்பிடிப்பர் என்று நாம் நம்புகின்றோம்.

### புலிகளுக்கு நாம் விடுக்கும் செய்தி

விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடன் தொடர்புடையவர்கள் எவரும் இந்தச் சபையில் இருந்தால் அமெரிக்க அரசாங்கத்தின் பின்வரும் இரண்டு செய்திகளையும் அவர்களிடம் தெரிவிக்கவும்.

1. விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தமிழீழத்துக்குப் போராடுபவர்களாக இருப்பின், அந்த இலக்கு அடைய முடியாதது என்பதனை தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

2. விடுதலைப் புலிகள் தமிழ் மக்கள் மீது உண்மையான அக்கறை உள்ளவர்களாயின் அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துபவர்களாயின், வன்செயல்களை கைவிட்டு பேச்சுவார்த்தை நடத்தும் வழியிலேயே செல்ல வேண்டும்.

கடந்த 18 வருடகால யுத்தம் - அதனால் உண்டான கஷ்டங்களும் - புதிய மாற்றமொன்றுக்கு வழிசெய்யக் கூடும்.

சகிப்புத் தன்மையை கைக்கொள்பவர்களே அடுத்து வரும் மாதங்களின வீரர்களாகத் திகழ்வார்கள்; வன்முறைகளை ஆதரிப்பவர்கள் அல்லர். சமரசத்துக்கும் மிதவாதத்துக்கும் கைகொடுப்பவர்களே அடுத்து வரும் மாதங்களின் வீரர்களாவர்; அடைய முடியாத பிரிவினைவாதம் மற்றும் தனித் தன்மை பார்வையையும் உடையவர்கள் அல்லர்.

நான் முன்னர் கூறியதை போன்று நாம் எல்லோரும் நவீன உலகில் ஒன்றுக்கு ஒன்று தொடர்புடைய இயல்புக் குட்பட்டவர்கள். தீவிரவாதப் பார்வையைவிட சேர்ந்து வாழும் தன்மையே மிகப் பொதுவாக பரவி நிற்கின்றது; சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள், பறங்கியர்கள் எல்லோரும் இதில் அடங்குவர்.

அமெரிக்கா பல்லியல்புடையதாக இருப்பினும் அவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்று இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே அதன் ஸ்தாபகர்கள் கருதினார்கள். இலங்கையும் அதனைச் செய்ய இயலும் என்று நான் நினைக்கின்றேன். நீங்கள் எல்லோரும் மீண்டும் ஒன்று சேர்ந்து சமாதானமாக வாழ முடியும் என்று அமெரிக்கா திடமாக நம்புகிறது. பல்லியல்பு தன்மையுடைய ஏனைய சமூகங்களைப் போல, பல்லினமும் பலவளமும் உங்களையும் ஒற்றுமையாக வைத்திருக்கும் - என்று கூறினார். (அ-5-6)

## பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட வழிபாடு

யாழ்ப்பாணம், மார்ச் 8

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தராக இரண்டாவது தடவையும் பதவியேற்று நாளை வெள்ளிக்கிழமை இரண்டாவது வருடத்தில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு பல்கலைக்கழகத்தில் விசேட வழிபாடுகள் நடத்தப்படவுள்ளன.

நாளைக் காலை பத்து மணிக்கு யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் பல்கலைக்கழகச் சமூகமும் ஆலய பரிபாலன சபையும் இணைந்து இவ் வழிபாடுகளை நடத்த ஏற்பாடாகியுள்ளது. (ஐ-5)

## மகளிர் தின கையேடு வெளியீடு

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழகச் சமூகவியல் சமூகத்தினரால் 'சிந்தனை கள்' என்ற கையேடு இன்று வெளியிடப்படவுள்ளது.

இந்தக் கையேட்டில் பெண்களின சம உரிமை, சம அந்தஸ்து, மற்றும் பெண்விடுதலை தொடர்பான பல விடயங்கள் இடம்பெற்றுள்ளன. (ஐ-7)



யாழ். பொது நூலகத்தில் அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ் நேற்று ஆற்றிய விசேட உரையை செவிமடுக்க திரண்டிருந்த அதிகாரிகள், மதத் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களில் ஒரு பகுதியினரை படங்களில் காணலாம்.

*(படம்:- கொனிக்கா கலர் லாப்)*

## தூதுவரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யிட்ட கருத்து பலரது உணர்வுகளையும் பாதித்ததை உரை நிறைவுற்ற பின்னர் மண்டபத்துக்கு அப்பால் அவர்கள் கூடி நின்று பேசிய வேளை அவதானிக்க முடிந்தது.

சுய நிர்ணய உரிமை, வடக்கு - கிழக்குக்கு சுயாட்சி என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் தமிழ் மக்கள் தங்களுக்கு ஒரு நியாயமான தீர்வு ஒன்று கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்த்திருக்கும் எதிர்பார்ப்பு இப்போதைய சூழ்நிலையில் அமெரிக்கத் தூதுவர் ஆற்றிய உரை அவற்றை மழுங்கடிக்கும் முயற்சியாக அமைந்திருந்ததாகப் பலரும் பேசிக் கொண்டனர்.

தூதுவரின் உரை முடிந்ததும் சபையில் உள்ளவர்களின் சந்தேகங்களைக் கேட்பதற்கு இடமளிக்கப்படும் என எதிர்பார்த்திருந்தவர்கள் அவ்வாறு சந்தர்ப்பம் வழங்கப்படாதது குறித்தும் கவலை தெரிவித்தனர். (அ-5-6-7)

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
✪ அர்ஜுன் - மதுபாலா
அர்ஜுனா
✪ நாகார்ஜுன், பிரகாஷ்ராஜ் ரகுவரன் - சௌந்தர்யா
குருஷேத்ரம்
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்
(சி15605)

NEW SCIENCE COLLEGE JAFFNA
பௌதிகவியல்
Mr.KARUNANITHY (B.Sc. (Spl.)
இலத்திரனியல்
SAT.,SUN. - 7.00 மணி
2003 A/L
பொறியியல்
SAT., SUN. 11.00 மணி
ஆரம்பம்: 10-03-2001 சனி
(85048)

## மட்டக்களப்பில் இரு பொலீஸார் காயம்

மட்டக்களப்பு,மார்ச்8

மட்டக்களப்பு மாமாங்கம் பொலீஸ் காவல் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸ் கான்ஸ்டபிள்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் நேற்றிரவு மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கே.சுமணசிறி(வயது23), எஸ். ஈபேட்(வயது21) ஆகியோரே சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் நேற்றிரவு மாமாங்கம் பொலீஸ் காவல் நிலையத்துக்கு முன்பாக நடமாடிய சமயம் காவல் நிலையத்தில் இருந்து அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். (ஐ-7-21)

## கிரிக்கெட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டுமென நேற்று நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குரல் எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த அர்ஜுனா ரணதுங்க மதான விசாரணைகள் உரிய முறையில் நடத்தப்படும் என உறுதியளித்தார். (ஐ-7)

SUBRA(14)
சித்தன்கேணி
உயிரியல்
தூரிதமீட்டலும் வினாவிடையும்
BY:- Suganthan
(Sat., Sun. 8-9)
அளவையியல்
2002 A/L
✪ குறியீட்டு அளவையியல்
ஆரம்பம்-10-03-2001 (10.30)
✪ 500 க்கு மேற்பட்ட பயிற்சிகள் மேலதிக வகுப்புக்களில் கற்பிக்கப்படும்
By: E.S. பவன்
உயிரியல்
2002 - தொழிற்படும் விலங்கு
2003 - உயிரியலுக்கான அடிப்படை
2001 - நுண்ணுயிரியல்
(SAT.,SUN. - 3-6)
BY:- Surendranathan
(850750)

## கும்புறுப்பிட்டியில் மோதல்

கொழும்பு,மார்ச்8

திருகோணமலைக்கு வடக்கே கும்புறுப்பிட்டியில் நேற்றுமுன்தினம் பதுங்கியிருந்த படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அந்தப் பகுதியில் 15 நிமிடங்கள் மோதல் நீடித்ததாகவும் -

இந்த மோதலில் விடுதலைப் புலிகளின் எட்டு உறுப்பினர்கள் உயிரிழந்ததாகவும் -

தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது. (ஐ-3)

## சயனைட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இளைஞர் ஒருவர் சயனைட் உட்கொண்டு மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வீட்டில் இருந்து 9எம்.எம். பிஸ்ரல் ஒன்றும் அதற்குரிய ரவைகளும் மீட்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிருப்தியை தூதரிடம் தெரியப்படுத்தினர்.

விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பு என்றும் அவர்களை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்கமுடியாது என்றும் தனது உரையில் தூதர் குறிப்பிட்டிருந்தார். இது குறித்து பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் அதிருப்தியையும் ஆழ்ந்த மனவருத்தத்தையும் தெரிவித்தனர்.

குடாநாட்டு மக்களின் உடனடித் தேவை அர்த்தமற்ற புனரமைப்புக்களோ, அபிவிருத்திப் பணிகளோ அல்ல. மக்களையும், பிரதேசத்தையும் அழித்துவரும் யுத்தம் உடனடியாகத் நிறுத்தப்படவேண்டும் என்பதே அவர்களின் பேரவா என்றும் மாணவர்கள் தூதரிடம் எடுத்துரைத்தனர்.

நாளாந்த வாழ்வில் யாழ்.மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் இரவு ஊரடங்குச் சட்டம் போன்ற கட்டுப்பாடுகள் தொடர்பாக அமெரிக்கத் தூதருக்கு துணைவேந்தர் விளக்கமளித்தார்.

இந்தச் சந்திப்பின் போது மாணவர் ஒன்றியத்தின் சார்பில் தூதரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (ஐ-6-7)

"எமது சேவையில் இணையாது வெளி நிற்கும் ஒரு சில மாணவர்களுக்கு இறுதிச் சந்தர்ப்பத்தை அளிக்கும் முகமாக"
நடைபெறுகிறது
A/L 2001
கருத்தரங்கும், வினா, விடை வகுப்பும்
பிரதி சனி, ஞாயிறு
காலை 7 – 8
கணக்கீடு
D.SAM
D.M.I
யாழ். நகர்
(சி15587)

முழுநிலா நாள் கருத்தரங்கு
கருப்பொருள் :- "தற்கொலை முயற்சி"
கருத்துரை வழங்குபவர்:- அருட்திரு. செ.யே.இராஜநாயகம் (இயக்குநர், "அகவொளி")
திரு.கே.நந்தகுமார் (உளவியலாளர், Dip. In Nursing)
காலம் :-நாளை (09-03-2001) வெள்ளிக்கிழமை
நேரம் :-பிற்பகல் 3.30 மணி (இ.நே.)
இடம் :-"அகவொளி"
குடும்ப வளத்துணை நிலையம்,
131, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.
இதில் கலந்து பயன்பெற அனைவரையும்அன்புடன் அழைக்கின்றோம்.
– இயக்குநர்.
(85051)

AJAY COMPUTER INSTITUTE - MANIPAY - JAFFNA - Microsoft Word
File Edit View Insert Format Tools Table Window Help
AJAY COMPUTER INSTITUTE
MANIPAY - JAFFNA
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 10-03-2001 9.00 am 4.00 pm
சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.
கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
முதலில் இணையும் 250 மாணவர்களுக்கு விரிவுரைக் கட்டணங்கள் முற்றிலும் இலவசம்.
PHOTO QUALITY PRINTING, STENCIL CUTTING, CARD CREATION, SCANNING, BOOK CREATION செய்து கொடுக்கப்படும்
(85017)
Page 1 Sec 1 1/1 At 14.6cm Ln 1 Col 1
Start Microsoft Word - Doc... AJAY COMPUTER INSTITUTE - MANIPAY - JAFFNA . 6:24 PM

# தப்பியோடிய படையினருக்கு மீண்டும் ஒருவார காலக்கெடு

கொழும்பு,மார்ச்8

படைகளிலிருந்து தப்பியோடிவந்து தலைமறைவாகியிருப்போருக்கு மீண்டும் ஒருவார காலம் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பொது மன்னிப்புக்காலம நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை தொடக்கம் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ள ஒருவார காலத்துக்குள் சரணடையும் படையினர் தண்டனைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள் என்றும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

# உயர்நீதிமன்ற நீதிபதி தமிழில் உரை

கொழும்பு,மார்ச்8

உயர்நீதிமன்ற நீதிபதியாக சி. விக்கினேஸ்வரன் நேற்றுப் பதவியேற்றார். நேற்று நடந்த முதல் அமர்வில் அவர் தமிழில் உரையாற்றினார்.

அவரை வரவேற்று சட்டத்துறை தலைமை அதிபதியும், சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும் உரையாற்றினர்.

இலங்கை வரலாற்றில் உயர் நீதிமன்ற அமர்வில் நீதிபதி ஒருவர் தமிழில் உரையாற்றியது இதுவே முதற் தடவையாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

விழி சொரியும் நீரருவி
எமது சக மாணவன் கோ.இலங்கேசன் அவர்களின் அருமைத் தாயார்
திருமதி சசிகலா கோபாலரத்தினம்
அவர்களின் மறைவால் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்தித்து எம் விழி சொரியும் நீரருவிகளைச் சமர்ப்பணம செய்கின்றோம்.
பொறியியற் பீட இறுதி வருட மாணவர்கள்,
பேராதனை வளாகம்
(85100)

கண்ணீர் அஞ்சலி
ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கிராம அலுவலராகப் பணியாற்றும்
திரு.எஸ்.கே.சிவனடியான் அவர்களின் மகள்
செல்வி எஸ்.கிருபாலினி
அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் இறப்பால் துயருற்றிருக்கும் பெற்றோர் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அநுதாபத்தையும் அன்னாருக்கு எமது அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.
உதவி அரசாங்க அதிபர் பணிமனை, தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை.
உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், பணியாளர்கள்.
(85106)

கண்ணீர் அஞ்சலி
யாழ். கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. [illegible] அவர்களின் அன்பு மாமனார்
கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை
அவர்களின் மறைவையொட்டி ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பெரும்பாக உத்தியோகத்தர்கள்,
கமநலசேவைகள் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
(85085)

மரண அறிவித்தல்
சேனாதிராசா சந்திரமோகன்
கச்சேரியடி, பாரதி வீதியைப் பிறப்பிடமாகவும், அரியாலை, சுப்பிரமணியம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராசா சந்திரமோகன் அவர்கள் 06.03.2001 அகால மரணமானார்.
அன்னார் சேனாதிராசா - காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்பு மகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், பிரியா, நிரோஜனா, துஷ்யந்தன், பௌத்திரன், கலைவாணி, சுகந்தியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் திரு. திருமதி நாகராசா, செல்வராசா(கனடா), அமுதா(கனடா), சௌந்தரராஜன்(ஹொலண்ட்), கிருஷ்ணகுமார்(சுவிஸ்), தங்கராசா(புத்தளம்) ஆகியோரின் பெறாமகனும், சேகர், காந்தன், ஜெயந்தன், சுகந்தன், கலா, முகுந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சதாசிவம், செல்வராசா, ரவீந்திரன், செல்வறாணி, சகுந்தலா, சிவபாதம் (கனடா) ஆகியோரின் மருமகனும், லீலாவதி, மகேஸ்வரி, மகாலெச்சுமி, சுமதி, கோமதி, கவிதா ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் இராசம்மாவின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2001)வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு 28, சுப்பிரமணியம் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக சித்திப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.
28, சுப்பிரமணிய வீதி, அரியாலை.
தகவல்: சேகர் (சகோதரன்)
(C/15608)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08. 03. 2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.